விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 08 சனிக்கிழமை (24.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 217

ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மக்களுடன் இணைந்து

## பௌத்த தேரர்கள் வீதிக்கு இறங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை

முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)
நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு களை வழங்க இலங்கை அர சாங்கம் தவறும் பட்சத் தில், பொதுமக்களுடன் 19

வவுனியாவில்

## கொரோனாவால் ஒருவர் மரணம்

(வவுனியா)
வவுனியா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த நபர் ஒருவர் கோவிட் தொற்று 19

கொரோனா

## +1,785

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் 1,785 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 19

# நாட்டில் வேகமாக பரவும் டெல்டா திரிபு தொற்று

### வவுனியா, முல்லைத்தீவு உள்ளிட்ட பல இடங்களில் 61 தொற்றாளர்கள் கண்டுபிடிப்பு



(கொழும்பு)
நாட்டில் வேகமாக பரவி வரும் டெல்டா திரிபு வைரஸ் தொற்று டன் மேலும் 61 பேர் கண்டறியப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு உட்பட நாட்டின் பல பகுதியில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மிகக் கொடிய வைரஸ் திரிபு வகையான "டெல்டா" தொற்றுடன் மேலும் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளதை அடுத்து இலங்கை யில் "டெல்டா" கோவிட் திரிபால் பாதிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கை 61ஆக அதிகரித்துள்ளதாக 19

கொரோனா

## யாழில் மேலும் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 19

கட்டுப்பாடுகளை மீறி

## திருமணங்கள் நடத்தினால் வழக்கு தொடுக்க நடவடிக்கை

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)
கோவிட் சட்டத்தை மீறி திரு மண நிகழ்வுகளை நடத்துபவர் கள் மற்றும் திருமண மண்டப உரிமையாளர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்க நட வடிக்கை எடுத்து வரு 19

## கொரோனாவால் 43 பேர் உயிரிழப்பு

4 ஆயிரத்தை கடந்த பலியெடுப்பு

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 43 பேர் கொரோனாத் தொற்று காரண மாக உயிரிழந்துள்ளதாக அறி விக்கப்பட்டதையடுத்து மொத்த கோவிட்-19 19

## ஜேர்மனியில் வெள்ளப்பெருக்கு

யாழைச் சேர்ந்தவர் பலி

(பேர்லின்)
ஜேர்மனியில் அண்மையில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தில் சிக்கி, ஈழத் தமிழ் இளைஞர் 19

## போராட்டங்களால் மாணவர்களின் எதிர்காலத்தை பலிகொடுக்க இயலாது

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)
ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதன் மூலம் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினரை முன்நிறுத்திய சேவையை உயர்மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கும் அதனூடாக இலங்கையின் இல வசக் கல்வி முறைமையை 19

யாழ்ப்பாணத்தில் 29 பேர் உட்பட

## வடக்கில் 50 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 29 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 19

## கறுப்பு ஜூலையை முன்னிட்டு லண்டனில் திரண்ட தமிழர்கள்



19

மன்னார் வளைகுடாவில்

## இந்தியக் கடற்படை கண்காணிப்பு

(மன்னார்)
மன்னார் வளைகுடா கடற் பகுதி மற்றும் தீவுகளை இந்தியா வின் கிழக்கு கடற்படை கட்ட ளைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெனரல் 19

கோட்டாவின் பெயரைக் கேட்டால்

## அஞ்சிய காலம் மலையேறி போய்விட்டது – சுமந்திரன்

(அம்பாறை)
ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் பெயரைக் கேட்டால் அஞ்சிய காலம் முடிந்து தற்போது ஜனாதிபதி செயலகத்தை முடக் கும் நிலைமை உருவாகியுள்ள தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்துள்ளார். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ். வேலணை அம்மன் கோவிலடி 4ஆம் வட்டாரத்தைப்
பிறப்பிடமாகவும் வவுனியா பூந்தோட்டத்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## சித்திரவடிவேல் கிருபாகரன் (கிருபா)



கருமேனிக்குள்ளும்
கருணை பூத்தவனின்
திருமேனியையும்
தின்று விட்டதா கிருமி?

ஊர்வாடை வீசித் திரிந்தவனை
ஊரோடு காற்றாய்ச் சுழன்றவனை....
ஓர் பாடையில் சுமக்கக்கூடப் பலனின்றி
போச்சுதே?
அம்பிகையைச் சுமக்க
சகடை செய்து கொடுத்தாய்
அட கிருபா ....
உன்னைச் சுமக்க எம்
தோள்களைக் கூடவா வெறுத்தாயடா கிருபா

தோற்றம் 28.08.1982 மறைவு 23.07.2021

பிரிவினால் துயருறும்
வேலணை மக்கள் உறவுப்பாலம்

(7432)

# 31ஆம் நாள் நினைவில் இதய அஞ்சலி



அமரர்

## செல்லையா மலர்

எம் அம்மாவிற்காக.....
நாம் எழுதாத எம் கவியை உங்களுக்காய் எழுதுகிறோம்.
காற்றில் உன் செவிகளுக்கு வரட்டும் அம்மா!

மலருக்கு ஒத்த மனம் கொண்டு
பெற்ற பிள்ளைகளுக்காகவும் பேரப்பிள்ளைகளுக்காகவும்
நித்தம் உமை வருத்தி எமை
காத்து வளர்த்த எங்கள் உயிர்
அம்மாவிற்கு கண்ணீரை காணிக்கை
ஆக்குகிறோம்....

கடந்த 24.06.2021 அன்று இறைபதம் அடைந்த எமது அன்பு தாயாரின் இழப்பில் துயருற்றிருந்த வேளை எமது துன்பத்தில் பங்கெடுத்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண்ணில் மானிடராய் : 05.05.1950
மாண்புறு மகத்துவமாய் : 24.06.2021

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7430)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பிற்கு நீதி வேண்டும்

# கறுப்பு ஜூலை தினத்தில்

# வடக்கு-கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுப்பு








(யாழ்ப்பாணம்)

கறுப்பு ஜூலை நினைவு தினமான நேற்று நீதிகோரி வடக்கு-கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அரசியல் கட்சிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். 1983 ஆம் ஆண்டு முதல் இன்று வரை நடைபெற்ற, நடைபெறுகின்ற இன அழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-18-33-285-250)

# மரண அறிவித்தல்



## நடுவில்தம்பி சிவசம்பு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30.07.1940 | 21.07.2021 |

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் அச்சுவேலி கதிரிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற இலங்கை கடற்படை வீரருமான நடுவில்தம்பி சிவசம்பு அவர்கள் கடந்த 21 ஆம் திகதி அன்று இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான நடுவில்தம்பி, கண்ணகை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேல்முருகு (ஆயுர்வேத வைத்தியர்) சகோதரனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கையா, ருக்மனி, நாராயணன் மற்றும் ராஜா, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், கிருபாகரன் (கனடா), புவனஜோதி, சசிகலா, தயாபரன், புவனா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுபோதினி (கனடா), ஞானலிங்கம், அனுபாமினி, கோவிந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுபரன், காலஞ்சென்ற பவித்திரன், நிருபரன், யோகராஜ், கீர்த்தினி, பவித்திரன் ஆகியோரின் பாசமான பேரனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று 22.07.2021 வியாழக்கிழமை அன்று பிற்பகல் 2 மணியளவில் கதிரிப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்: S.சுரேஸ்
(S.R. மருந்தக உரிமையாளர்)
உடுப்பிட்டி.

&

சி.ராஜேஸ்வரி (மனைவி)
076 984 0107

(7429)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கவர் வாணவேடிக்கைகளுடன் ரோக்கியோ ஒலிம்பிக் இனிதே ஆரம்பம்



இலங்கை அணி வீரர்களின் அணிவகுப்பு மரியாதை

ரோக்கியோ ஒலிம்பிக் ஆரம்ப விழா வாணவேடிக்கையுடன் எளிமையாக நடந்தது.

ஜப்பான் மன்னர் நாருஹிட்டோ போட்டிகளை முறைப்படி ஆரம்பித்து வைத்தார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல வீரர்கள் தனிமையில் பயிற்சி மேற்கொண்டனர்.

இவர்கள் 'தனிமையில் விடப்படவில்லை, அனைவரும் உணர்வுகளால் ஒன்றிணைவோம்' என்ற அடிப்படையில் ஆரம்ப விழா நடந்தது. அன்பால் இணைந்த உலக வீரர்கள் போட்டிகளில் சாதிக்க உள்ளனர்.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் 32வது ஒலிம்பிக் போட்டி, கொரோனா காரணமாக ஒரு ஆண்டு தாமதத்திற்குப் பின் நேற்று ஆரம்பமானது.

அகதிகள் அணி உட்பட 205 நாடுகளை சேர்ந்த 11,238 க்கும் மேற்பட்ட நட்சத்திரங்கள் 33 போட்டி களில் 339 பிரிவுகளில் திறமை வெளிப்படுத்த உள்ள னர்.

இதற்கான ஆரம்பவிழா நேற்று ஜப்பான் தேசிய மைதானத்தில் நடந் தது. கடந்த 2013இல் ரோக்கியோ தேர்வு செய்யப்பட்டது முதல், தற்போது வரையிலான நிகழ்வுகள் காண்பிக்கப் பட்டன.

பின் மைதானம் முழுவதும் வாண வேடிக்கைகளால் ஜொலித்தது. 'எலாஸ்டிக்' கயிறுகளைப் பயன்படுத்தி மனித உடலின் சிக்கலான நரம்புகளையும், உணர்ச்சிகளையும் நடன கலைஞர்கள் சித்தரித்தனர். பின் ஜப்பான் தேசிய கொடி ஏற்றப்பட்டது.

கொரோனாாவில் பலியானவர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. நவீன கட்டட கலைக்கு முன் இருந்த, ஜப்பானின் பாரம்பரிய மர வேலைப்பாடு பணிகளை கலைஞர்கள் கண்முன் தோன்றச் செய்தனர்.

பிறகு வீரர், வீராங்கனைகள் அணிவகுப்பு ஆரம்பமானது. பாரம்பரிய முறைப்படி முதலில் கிரீஸ் அணி வந்தது.

**ஜோதி ஏற்றம்:**

கிரீஸில் இருந்து கிளம்பிய ஒலிம்பிக் ஜோதி ஜப்பானில் 121 நாள் பயணம் செய்தது. நேற்று தேசிய மைதானத்துக்கு கொண்டு வரப்பட்டது. கிராண்ட் ஸ்லாம் அரங்கில் நான்கு கிண்ணங்கள் வென்ற ஜப்பான் டென்னிஸ் வீராங்கனை ஒசாகா, ஜோதியை ஏற்றினார்.

**ஒலிம்பிக்கை நிறுத்து**

ஆரம்பவிழா நடந்த போது மைதானத்துக்கு வெளியே 100க்கும் அதிகமானோர் திரண்டு ஒலிம்பிக் போட் டியை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'ஒலிம்பிக்கை நிறுத்து' என இவர்கள் எழுப்பிய கோஷம் மைதானத்துக்குள் கேட்டது.

**நிறைவேறிய 'மௌனம்'**

கடந்த 1972 முனிக் ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் துப்பாக்கியுடன் புகுந்த பாலஸ்தீனியர், 11 பேரை சுட்டுக் கொன்றார். 'பலியானவர்களுக்கு ஆரும்ப விழாவில் அஞ்சலி செலுத்த வேண்டும்,' என குடும்பத்தினர் நீண்ட ஆண்டுகளாக வற்புறுத்தினர். நேற்று முதன் முறையாக ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**'விண்வெளி' வாழ்த்து**

சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியுள்ள பிரான்ஸ் விண்வெளி வீரர் தாமஸ் பாக்குயட், டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் விளையாட்டு நட்சத்திரங்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இதுகுறித்து வீடியோ அனுப்பியுள்ளார்.

# தொடர் தோல்விகளிலிருந்து மீண்டது சிம்பாப்வே

## 2ஆவது ரி20ல் வங்கத்தை வீழ்த்தியது

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2ஆவது 'ரி20' போட்டியில் எழுச்சி கண்ட சிம்பாப்வே அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சிம்பாப்வே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற்றிருந்த நிலையில், 2ஆவது போட்டி நேற்று ஹராரேயில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணிக்கு வெஸ்லே (73), ரியான் பர்ல் (34*) கைகொடுக்க, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு மொஹமட் நைம் (5), சௌமியா சர்க்கார் (8), அணித் தலைவர் மகமதுல்லா (4), சகிப் அல் ஹசன் (12) ஏமாற்ற, 19.5 ஓவர்களில் 143 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்சமாக ஷமிம் ஹொசைன் 29 ஓட்டங்களை எடுத்தார்.

இதனையடுத்து 3 போட்டிகளைக் கொண்ட ரி20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான ரி20 போட்டி நாளை இதே மைதானத்தில் நடைபெறுகிறது.



சிம்பாப்வேயின் வெஸ்லே

6 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 23 02 1953
மறைவு 24 01 2021

அமரர்
தம்பிப்பிள்ளை சிங்க அரியரட்ணம்
(ஆயுர்வேத வைத்தியர்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அன்பு அப்பா
மண் விட்டு மறைந்து ஆறு மாதங்கள் ஆனாலும்
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எந்நாளும் எம்முடன் இருப்பீர்கள் அப்பா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வட்டுக் கிழக்கு,
வட்டுக்கோட்டை.


என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-2405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை தவறான தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டோம்

## ஹெடிகல்லே விமலசார தேரர் கவலை



(கொழும்பு)

**தவறான தலைவர்களிடம் நாடு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஹெடிகல்லே விமலசார தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கூறுகையில்,

நாடு தற்போது இராணுவமயப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு இராணுவமயப்படுத்தப்படும் போது, நாட்டின் ஜனநாயகம் வேகமாக மரணித்து வருகிறது. இதன் ஊடாக இலங்கை சர்வதேசத்திற்கு முன்னால் ஒதுக்கப்படும் நாடாக மாறியுள்ளது.

அத்துடன் அரசாங்கம் நாளுக்கு நாள் எடுக்கும் தீர்மானங்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியை மேலும் உக்கிரமடைய செய்யும் தீர்மானங்கள். இவை அனைத்துக்கும் மத்தியில் இலங்கை தோல்வியடைந்த நாடாக மாறும் எல்லைக்குள் வந்துள்ளது.

தற்போது செய்வதற்கு எதுவுமில்லை. தவறு நடந்து விட்டது. தவறான தலைவர்களிடம் நாட்டை ஒப்படைத்தோம். தவறான சக்திகளிடம் நாட்டை ஒப்படைத்தோம்.

நாங்கள் செய்த அந்த தவறு குறித்து தொடர்ந்தும் மனவருத்தத்தில் இருக்கின்றோம். அந்த தவறை திருத்த வேண்டும் எனவும் விமலசார தேரர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## 'திகட சக்ர' நடத்தும் 49 வது கிணத்தடி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திகட சக்ர எனும் இணைய வழி முகநூல், வலையொளித் தள அமைப்பு நடத்தும் 49 ஆவது கிணத்தடி நிகழ்வு இன்று சனிக்கிழமை 24 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு நேரலையாக இடம்பெறவுள்ளது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேறுபாடு குறைந்து வருவது ஆரோக்கியமானது/இல்லை என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. பட்டிமன்றத்தின் நடுவராக பிரபல பேச்சாளர் கலைமாமணி சொல்வேந்தர் சுகி சிவம் கலந்து கொள்கின்றார்.

மேலும் இப்பட்டிமன்றத்தில் ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்), ச.கேசவன் (விரிவுரையாளர்), ப.பாலகோபி (சிறு நீரக, சனனித்தொகுதி வைத்திய நிபுணர்), சட்டத்தரணி இ.எழில்மொழி, சட்டத்தரணி ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ, த.ஆரதி (சட்டபீட மாணவி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வை thigada chakra எனும் facebook, youtube தளங்களின் ஊடாக பார்வையிடலாம். (4-8-6)

## டெல்டா திரிபுக்கு எதிரான சினோபார்ம் செயற்றிறன் குறைவு

### இலங்கையின் ஆய்வை மறுக்கும் சர்வதேச ஆய்வு

(கொழும்பு)

சினோபார்ம் தடுப்பூசி டெல்டா மாறுபாட்டிற்கு எதிராக பலவீனமான பிறபொருளெதிரியை வெளிப்படுத்தியுள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

சினோபார்ம் தடுப்பூசி மிகவும் வினைத்திறனானது என இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் அறிவித்துள்ள நிலையில், இந்த தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையில் அதிகளவில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசியாக சினோபார்ம் காணப்படுகின்றது.

இதுவரையில் இலங்கைக்கு 9.1 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், சினோபார்மின் பிபிஜபிபி-கோர்வி (BBIBP-CorV) தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களின் பிறப்பொருளெதிரி அளவுகள் டெல்டா திரிபுக்கு எதிராக குறைவாக காட்டுவதாக ரொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருட பிற்பகுதியில் இந்தியாவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட டெல்டா திரிபு, உலகளவில் ஆதிக்கம் செலுத்திய வைரஸ் மாறுபாடாக மாறியுள்ளது. பிரித்தானியா, இந்தோனேசியா, அமெரிக்கா மற்றும் தென்கொரியா உள்ளிட்ட பல நாடுகளில் வைரஸ் பாதிப்பு அதிகரித்துள்ளதோடு, உலகளவில் 90 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இது கண்டறியப்பட்டுள்ளது.

சீன தேசிய ஔடத குழுமத்தின் தயாரிப்பான, சினோபார்ம் தடுப்பூசி, பீட்டா மாறுபாட்டிற்கு எதிரான பிறபொருளெதிரி அளவுகளில் 10 மடங்கு குறைவதைக் காட்டியதோடு, இது முதலில் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டது.

இந்நிலையில், சினோபார்ம் தடுப்பூசி டெல்டா மாறுபாட்டிற்கு எதிராகவும் பலவீனமான பிறப்பொருளெதிரியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

சினோபார்ம் சீனாவில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் கொரோனா தடுப்பூசியாக காணப்படுகின்ற நிலையில், 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை உலகளாவிய தடுப்பூசி பகிர்வு திட்டமான கொவெக்ஸ்க்கு 170 மில்லியன் டோஸ் தடுப்பூசிகளை வழங்க சினோபார்ம் இணக்கம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், சினோபார்ம் தடுப்பூசி மிகவும் வினைத்திறனானது என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் முன்னெடுத்த ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களில் 95 வீதமானவர்களுக்கு பிறபொருளெதிரி வலுவாகியுள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

இந்த தடுப்பூசியின் இரண்டு மருந்தளவுகளைப் பெற்றுக் கொண்டவர்களில் 95 வீதமானவர்களுக்கு மிகவும் அதிகளவிலான் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகி கொரோனா வைரஸ் தொற்றின் பல்வேறு திரிபுகளையும் முறியடிக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மாகாணங்களுக்கு இடையில் மீண்டும் போக்குவரத்து சேவைகள்

### -அரசாங்கம் அறிவிப்பு-

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் மாகாணங்களுக்கிடையிலான பேருந்து, ரயில் சேவைகள் மீள ஆரம்பமாகவுள்ளன.

தீவிர கொவிட் வைரஸ் பரவல் காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு சில அத்தியாவசிய காரணங்களுக்கு மாத்திரம் மாகாணம் விட்டு மாகாணம் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



கறுப்பு ஜூலை படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு யாழ்.மாநகர சபையில் நேற்றைய தினம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

## இன்னும் இரண்டு மாதங்களில் பஞ்சம் ஏற்படும்-சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியானது குறுகிய காலத்தில் ஏற்பட்டதல்ல, அது நீண்டகாலமாக அதிகரித்து வந்த நிலைமையின் பிரதிபலன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள வலையொளி தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாத நெருக்கடியே தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது அடுத்ததாக தேசிய நிதிப் பற்றாக்குறையாகவும் தேசிய சந்தையில் வீழ்ச்சியாகவும் மாறும்.

சர்வதேச நிதி தரப்படுத்தல் நிறுவனங்களுக்கு அமைய இலங்கை தற்போது மிகவும் ஆபத்தான நாடுகளுக்கும் கீழே உள்ளது.

அடுத்த நிலைமையானது வாங்குரோத்து நிலைமையாகும். மிக விரைவில் ஒரு நாள் இலங்கையின் வங்கித்துறை வீழ்ச்சியடையக் கூடும்.

இன்னும் இரண்டு மாதங்களில் இலங்கையில் நிச்சயம் பஞ்சம் ஏற்படும். தற்போதைய ஆட்சியாளர்களால் அதனை தடுத்து நிறுத்த முடியாது எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை சுற்றிவளைப்பு

## 9 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

**கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சுற்றிவளைப்புத் தேடுதலில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.**

அவர்களில் மூவர் அண்மைய வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என பொலிஸார் கூறினர்.யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயின் வழிகாட்டலிலும் அவரது பங்கேற்புடனும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பங்களிப்புடன் இந்த சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களில் 22,23 மற்றும் 25 வயதுடைய மூவர் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந் துள்ளது.ஏனைய 6 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-8-6-33)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறிக்குரிய (Advanced Certificate in Entrepreneurship and Small Business Management) 2021 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் WWW.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 03.08.2021 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 0212223374 எனும் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (4-8)





# அராலியில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம் முச்சக்கரவண்டி தீயிட்டு எரிப்பு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு வாள் வெட்டுக் குழுவினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வாள்கள் மற்றும் இரும்புக் கம்பிகளுடன் வந்த நால்வர் வீட்டு ஜன்னலின் கண்ணாடிகள் மற்றும் முச்சக்கர வண்டியின் கண்ணாடியினை உடைத்து முச்சக்கரவண்டிக்கு தீ மூட்டியுள்ளனர்.



இதனால் முச்சக்கரவண்டி பகுதியளவில் சேதமடைந்துள்ளது.வீட்டில் உள்ளவர்கள் தூக்கத்தில் இருந்தவேளை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் நிகழும்போது விழித்துக்கொண்ட வீட்டுக்காரர்களும் அயல்வீட்டினரும் துரத்தியவேளை தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பித்துச் சென்றனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(4-8-6-104-33)

# பெண்ணிடம் சேட்டை செய்த இளைஞன் விளக்கமறியலில்

(கரணவாய்)

வீதியால்சென்றபெண்ணிடம் சேட்டை செய்த இளைஞன் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி- கொடிகாமம் வீதியில் அரசடிச் சந்திப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் சேட்டை செய்துள்ளார். இது தொடர்பில் அவர் செய்த முறைப்பாட்டை அடுத்து கைது செய்யப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது அவரை அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (4-6-8-60)

கறுப்பு யூலையை நினைவு கூரும் வகையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் இரவோடு இரவாக கழிவு ஒயில் ஊற்றப்பட்டும் கிழித்தெறியப்பட்டும் காணப்பட்டது. (படம்- சிவசாந்தன்)




# சூரிய மின் விளக்குகளால் ஒளிரூட்டப்பட்டது வல்லை பாலம்



(குப்பிழான்)

யாழ்.வல்லைப் பாலத்திலிருந்து அச்சுவேலி - வல்லைச் சந்தி வரை சூரிய மின் விளக்குகளால் ஒளியூட்டும் ஒரு மில்லியன் ரூபாய் திட்டம் மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் சிபாரிசு செய்யப்பட்டு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வல்லைப் பாலம் உள்ளடங்கிய பிரதான வீதியில் வலு கூடிய மின்சாரக் கம்பிகள் ஊடறுத்துச் செல்வதால் அங்கு சாதாரண மின்குமிழ்களைப் பொருத்த முடியாத நிலை கடந்த பல வருடங்களாக நீடித்து வந்தது. இதன் காரணமாக வல்லைப் பாலம் உள்ளிட்ட பிரதேசங்கள் இரவு வேளைகளில் இருளில் மூழ்கியே காணப்பட்டன.

இதனால், மேற்படி பகுதிகளில் தொடர்ச்சியாக வீதி விபத்துக்களும் இரவுநேர வழிப்பறிக் கொள்ளை உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களும் இடம்பெறும் இடமாக வல்லைப் பாலம் மாறி வரும் நிலையில் அதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலும் மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (4-8-6-18)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்-2021

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி நாளை மறுதினம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பழைய பூங்கா வீதி, முற்பகல் 11 மணிக்கு புதிய வீடமைப்பு திட்ட வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு தொடர்மாடிக் குடியிருப்பு,

27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில், முற்பகல் 11 மணிக்கு பழைய பூங்கா வீதி சிறுவர் நீதிமன்றப் பகுதி, பிற்பகல் 2.30 மணிக்கு திருநகர் மாணவர் படிப்பகம்,

28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இராஜசிங்கம் வீதி மாதாசிலையடிப்பகுதி, முற்பகல் 11 மணிக்கு சென். பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகில், பிற்பகல் 2.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தியடி அருகில்,

29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இராஜேந்திரா வீதி, முற்பகல் 11 மணிக்கு டேவிற் வீதி கடற்கரை வீதி சந்தி அருகில், பிற்பகல் 2.30 மணிக்கு மவுண்காமல் வீதி பாங்சால் வீதி,

30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சென்றோக் சனசமூக நிலையம் முன்பாக, முற்பகல் 11 மணிக்கு றெக்கிளமேசன் சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணிக்கு புதிய கடற்கரை தண்ணீர்த் தாங்கி சந்தி,

ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தண்ணீர்த்தாங்கி 4ம் 5ம் குறுக்குத் தெரு, முற்பகல் 11 மணிக்கு சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக, பிற்பகல் 2.30 மணிக்கு 2 ம் குறுக்குத்தெரு குருநகர்,

4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு ஐஸ்பிளாண்ட வீதி, முற்பகல் 11 மணிக்கு குருநகர் சனசமூக நிலையம் முன்பாக, பிற்பகல் 2.30 மணிக்கு கடற்கரை வீதி 1 ம் குறுக்குத்தெரு சந்தி,

5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாங்சால் வீதி 4ம் குறுக்குத் தெரு சந்தி, முற்பகல் 11 மணிக்கு யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை, பிற்பகல் 2.30 மணிக்கு புதுமை மாதா ஆலயத்திற்கு அருகாமை,


6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஓடக்கரை வீதி, முற்பகல் 11 மணிக்கு யூபிலி மகப்பேற்று நிலையம் முன்பாக, பிற்பகல் 2.30 மணிக்கு குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக,

7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு செபஸ்ரியார் கோவில் அருகாமை ஆகிய இடங்களில் வழங்கப்படவுள்ளது என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா தொற்றினால் ஆயிரம் மடங்கு பாதிப்பு

## சீன ஆய்வில் தகவல் என்கிறார் சந்திம




(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை விட டெல்டா தொற்றினால் உள்ளானவர்களுக்கு 1000 மடங்கு பாதிப்பு அதிகமாகும் என்று சீனாவில் ஆய்வொன்றில் இனங்காணப்பட்டுள்ளதாக ஶ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குறித்த ஆய்வு முடிவின் அடிப்படையில் டெல்டா திரிபானது பெருமளவான மக்களை தாக்கக் கூடியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையை மேற்கோள்காட்டி டுவிட்டரில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும் டெல்டா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு கொவிட் தடுப்பூசிகளை இரு கட்டங்களாக பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும்.

அத்தோடு டெல்டா தொற்றுக்கு எதிரான சிறந்த தடுப்பூசியாக தமது ஆய்வில் இனங்காணப்பட்டுள்ள சைனோபார்ம் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது சிறந்ததாகும் என்றும் கலாநிதி சந்திம ஜீவந்தர குறிப்பிட்டுள்ளார். (ஙி-5)

# வர்த்தகத்திற்கு சவாலான இடமாக இலங்கை

## அமெ.இராஜாங்க திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

**அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2021 முதலீட்டு சாத்திய அறிக்கையில், வர்த்தகம் செய்வதற்கான ஒரு சவாலான இடமாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.**

அதிக பரிவர்த்தனை செலவுகள், கணிக்க முடியாத பொருளாதாரக் கொள்கை, அரசாங்க சேவைகளின் திறனற்ற விநியோகம் மற்றும் கொள்முதல் நடைமுறைகள் இதற்கான காரணங்கள் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஒப்பந்த நிராகரிப்பு, அல்லது நியாயமற்ற பறிமுதல் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் என்பவை தொடர்பில் முதலீட்டாளர்கள் கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்க அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் செயற்படும் அமெரிக்க நிறுவனங்களுக்கு பொதுத்துறை ஊழல் ஒரு குறிப்பிடத்தக்க சவால் என்பதுடன் முதலீட்டிற்கு ஒரு தடை என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இலங்கையில் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு, பொதுவாக போதுமான சட்டங்களும் விதிகளும் உள்ளன.

எனினும் அவற்றின் அமுலாக்கம் பலவீனமானது. வரலாற்று ரீதியாக, முக்கிய அரசியல் கட்சிகள் அரசியல் பதவிகளைப் பெற்றபின் அல்லது இழந்த பின்னர் ஒருவருக்கொருவர் எதிராக ஊழல் வழக்குகளைத் தொடரவில்லை என்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முதலீட்டு சாத்திய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஙி-5)

# பதிவு செய்யப்படாத மருந்துகள் விற்பனை

## விரிவான விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் பதிவு செய்யப்படாத மருந்துப் பொருட்கள் தொடர்பில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுமார் 7 வகையான மருந்துப் பொருட்கள் பதிவு செய்யப்படாது, சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் உணவு மற்றும் ஔடதங்கள் தொடர்பான தலைமை பரிசோதகர் அமித் பெரேரா குறிப்பிட்டார். அதற்கமைய, நாடளாவிய ரீதியிலுள்ள மருந்தகங்க ளில் குறித்த மருந்துப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பது தொடர்பில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஙி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: செவ் 9 சூரி 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: ஆட்டோ சொந்தக்காரர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11969

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 76 ¼ செவ் 8 சூரி 12 இல்
உயரம் : 6'
தகைமை/தொழில்: கொழும்பில் சொந்த புடைவை கடை, உள்நாடு மட்டும்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11970

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 50 செவ், சூரி 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Asst.Director, Event Manager (india)
எதிர்பார்ப்பு: இந்தியாவில் இருக்க வேண்டும்
தொ.இ: B/11972

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 9 ¼ செவ் 4 சூரி 2 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: தகுந்தவரன், உள்நாடு
தொ.இ: B/11974

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 10 செவ் 10 சூரி 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/5650

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 22 செவ் 11 சூரி 5 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:அழகுக்கலை(சொந்தம்)
எதிர்பார்ப்பு: கடை, வியாபாரம், சொந்தத் தொழில்
தொ.இ:G/5662

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 25 செவ், சூரி 9 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்:BA பட்டதாரி, அரச தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/5664

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42 செவ் 8 சூரி 3 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BCA,MCA, தனியார் ஆசிரியர்
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் ஏற்கப்படும்
தொ.இ:G/5675

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# ஓகஸ்ட் 3 முதல் 6 வரை பாராளுமன்ற அமர்வுகள்

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 6 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் பாராளுமன்ற அமர்வுகளை முன்னெடுப்பதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஙி-5)


# மணமகள் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரை வசிப்பிடமாக உடைய (பிறப்பு மட்டக்களப்பு) 1988 இல் பிறந்த ஆயிலிய நட்சத்திரம் பாதம்-1 செவ்வாய்+ சனி 2 விருச்சிக வீட்டில் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொழில்- தொழில்நுட்ப உதவியாளர், அரச உத்தியோகம் (அச்சுவினி, ஆயிலியம், மகம், மூலம், கேட்டை, ரேவதி, புனர்பூசம், மிருகசீரிடம், தவிர்ந்த நட்சத்திரங்கள் மற்றும் மகரம், மேடம், சிம்மம், கும்பம், இடபம், துலாம் இராசிகள் மற்றும் சூரியன்+ செவ்வாய் தவிர்ந்த) (7418)

தொடர்பு- 077 693 3004 / 077 380 4951

# ஏலவிற்பனை

யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் மூலம் ஏல விற்பனைக்காகப் பரிந்துரைக்கப்பட்ட பொருட்களுக்கான விற்பனை 11.08.2021, புதன்கிழமை அன்று நடைபெறவுள்ளது. ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் விபரங்களை பாடசாலை விளம்பரப் பலகையில் அலுவலக நேரத்தில் (9.00 மணி - 11.00 மணிவரை) பார்வையிடலாம்.

- ஏலவிற்பனை அன்றே பணத்தைச் செலுத்தி, பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.
- Covid -19 சுகாதார பாதுகாப்பு நடைமுறைக்கு அமைவாகவே பங்குபற்ற வேண்டியது அவசியமானதாகும்.

(அ-2403)

அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி இஷாலினிக்கு நீதிகோரி வவுனியாவில் கையெழுத்து போராட்டம்

(நெளுக்குளம்)

**மரணமடைந்த சிறுமி இஷாலினிக்கு நீதி வேண்டி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.**



சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஏற்பாட்டாளர்கள்,

இஷாலினியின் மரணத்திற்கு நீதி வேண்டி குறித்த கையெழுத்துப்போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம். நாடு முழுவதும் சிறுவர், சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அவர்கள் பணி செய்யும் பகுதிகளில் பல்வேறு துஷ்பிரயோகங்களிற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக இஷாலினியின் மரணத்துடன் தொடர்புபட்டவர்கள் தண்டிக்கப்பட்டு நீதி நிலை நாட்டப்பட வேண்டும்.

அத்துடன் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களையும், தரகர்களையும் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்றனர். குறித்த கையெழுத்து பிரதிகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(4-8-6-299)

# கடல் சீற்றங்களிலிருந்து பாதுகாப்பு பெற கடற்கரையில் மரங்களை நாட்டுங்கள்

## –பிரதேச சபை உறுப்பினர்–

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்கரையில் மரங்கள் நடுகை செய்யப்படுவது அவசியமானது என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்ரா புஸ்பானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு கடற்கரையில் மரக்கன்றுகளை நடுகை செய்வதன் மூலம் கடல் சீற்றங்களின் போது இயற்கையான பாதுகாப்பு கிடைக்கும். முல்லைத்தீவு கடற்கரைக்கு சுற்றுலா பயணிகள் வருகை தருவதன் காரணமாக இயற்கையான நிழல் கிடைக்கும்.


இதனைவிட 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப் பேரலையின் போது கடற்கரையில் மரங்கள் இல்லாததன் காரணமாக முல்லைத்தீவில் தாக்கம் கூடுதலாக அமைந்திருந்தது.

ஆழிப்பேரலையின் பின்னர் முல்லைத்தீவு கடற்கரையில் மரங்கள் நடுவதன் அவசியம் உணரப்பட்டு அதற்கான திட்டங்களும் கூட்டங்களும் நடத்தப்பட்டன. போர்ச் சூழல் காரணமாக முல்லைத்தீவு கடற்கரையில் மர நடுகைக்கான வாய்ப்புகள் உருவாகவில்லை.

தற்போது முல்லைத்தீவு கடற்கரை மற்றும் நகரம் என்பவற்றில் பெருமளவிலான மரக்கன்றுகளை நடுவதன் மூலம் இயற்கை சீற்றங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். கடற்கரை, நகரச் சூழல் வளம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

(4-8-6-350)

# மர்மப் பொதியால் பரபரப்பு!



(குருமன்காடு)

வவுனியாவில் அமைந்துள்ள கொப்பேகடுவ சிலைக்கு முன்பாக நேற்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை கலவரத்தை நினைவுகூர்ந்தும், இனப்படு கொலைக்கு நீதி வேண்டியும் போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

போராட்டம் முடிவடைந்து சிறிது நேரத்தில் குறித்த பகுதியில் இருந்த கொப்பேகடுவா சிலை முன்பாக இராணுவ சீருடையில் தயாரிக்கப்பட்ட பொதி ஒன்று காணப்பட்டது.

இதனை அவதானித்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா பொலிஸார் குறித்த மர்மப் பொதி அருகில் எவரும் செல்லவிடாது பாதுகாத்தனர்.

அதன்பின்னர், விசேட அதிரடிப் படையினரின் குண்டு செயலிக்கச் செய்யும் பிரிவினரை வரவழைத்து சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த பொதியில் ஆலயத் துண்டுப் பிரசுரங்களும், அதிர்ஷ்டலாபச் சீட்டு ரிக்கற்றுக்களும், வேறு தாள்களும் காணப்பட்டன. அதனை மீட்ட அதிரடிப்படையினர் அவற்றை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(4-6-8-250)

# சந்தை சுற்றுவட்ட வீதி தற்காலிகமாக முடக்கம்

(நெளுக்குளம்)

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதி தற்காலிகமாக இராணுவத்தினரால் முடக்கப்பட்டுள்ளது. குறித்த வீதியில் அமைந்துள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணிபுரியும் பணியாளர் சிலருக்கு கொரோனாத் தொற்று இருப்பது அண்மையில் உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்று காலை குறித்த வீதியுடனான போக்குவரத்து இராணுவம் மற்றும் பொலிஸாரால் துண்டிக்கப்பட்டு முற்றாக முடக்கப்பட்டது.

இதேவேளை முடக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களிற்கு சுகாதார பரிசோதகர்களால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.(4-8-6-299)

# வவு.பல்கலை.பதிவாளராக இராஜவிசாகன் நியமனம்

(வவுனியா)



வவுனியாப் பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர் நடராஜா இராஜவிசாகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டதாரியான இவர் இலங்கைப் பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர் சேவையில் உதவி பதிவாளராக இணைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில் தனது சேவையை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பிரதிப் பதிவாளர் எனப் பதவி உயர்வுகளைப் பெற்று பல பல்கலைக்கழகங்களில் பணியாற்றியவர்.

குறிப்பாக இலங்கை பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் நிர்வாகிகளின் குழுமத்திற்கு செயலாளராக இரண்டு தடவைகள் பணியாற்றியவர். மும்மொழிகளிலும் தேர்ச்சி மிக்க இவர் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பல அலகுகளிலும் கடமையாற்றியவர். (4-8-6)



அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரியும், கொத்தலாவ பல்கலைக்கழகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

(படம்:-வசந்தரூபன்)



இலங்கை செஞ்சிலுவை சங்கம் முல்லைத்தீவு கிளையால் 1.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா உபகரணங்கள் நேற்று முன்தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.உமாசங்கரிடம் கையளிக்கப்பட்டது.

(படம்:-தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

24.07.2021
ஆடி 08, சனிக்கிழமை
பூரணை முற்பகல் 8.50 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 2.05 மணிவரை
சுபநேரம் 3.02 - 4.32 மணிவரை
இராகுகாலம் 9.02 - 10.32 மணிவரை
சந்திராஷ்டமம்:-மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், செவி குளிரும் செய்தி வந்து சேரும், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ரோக பயமுண்டு.


மிதுனம்

வருமானம் வருவதற்கு முன்பே செலவுகள் காத்திருக்கும், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பதும் நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்

வராத உறவினர்கள் உங்கள் வீட்டுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


சிம்மம்

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.


கன்னி

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.


துலாம்

குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்யும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

பாராட்டும், புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


தனுசு

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மை உண்டு.


மகரம்

பெரியோர்களின் உதவியினால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


கும்பம்

சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


மீனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

உன் பணியை முடிந்தவரை சிறப்பாகச் செய்

# பங்கஸ் நோய்த் தாக்கம் பயிர்ச்செய்கைகள் அழிவு

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பலரது பயிர்கள் இரண்டு மாதம் கடந்த நிலையில் பங்கஸ் நோய் மற்றும் பூச்சிகளின் நோய் தாக்கம் காரணமாக அழிந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**




தற்பொழுது நகைகளை அடைவு வைத்தும் மற்றும் அதிக வட்டிக்கு பணம் பெற்றும் சிறுபோக பயிர்ச்செய்கையிலீடுபட்டு வரும் நிலையில் இயற்கையும் எம்மை கைவிட்டு விட்டதாகவும் தெரிவித்தனர்.

கிருமிநாசினிகள் தற்போது அதிகவிலைகொடுத்துபெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதுமட்டுமன்றி விவசாயத்துக்கான உரங்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தற்போது பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கம் காரணமாக தாம் இம்முறை சிறுபோக அறுவடையில் எதிர்பார்த்த விளைச்சலில் பாரிய சரிவை ஏற்படுத்தும் எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாங்கள் பலமுறை தெரிவித்திருந்த போதிலும் எமக்கு எந்த விதமான நட்டஈடும் கிடைப்பதில்லை எனவும் தெரிவித்தனர்.

இம்முறையாவது எமக்கு ஏதேனும் ஒரு வகையில் நட்டஈட்டைபெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (4-8-6-316)

# கறுப்புத்துணியால் வாய் கட்டி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்



(மன்னார்)

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜுலை தினத்தையொட்டி 15 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம்பெற்றது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வாயினை கறுப்புத் துணியால் கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். எரிபொருள் விலையை அதிகரிக்காதே-விவசாயிகள், கடற்றொழிலாளர்களுக்கு மானியம் வழங்கு, ஏழைகளை வஞ்சிக்காதே, அத்தியாவசிய பொருட்களுக்கு விலை அதிகரிக்காதே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து முடிவு சொல், இஷாலினியின் மரணத்திற்கு நீதியான விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(4-8-6-285)

# நோயாளர் விடுதிகள் திறந்து வைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான இரு நோயாளர் விடுதிகள் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன.


எஸ்.கே.அறக்கட்டளையின் ஸ்தாபகர் எஸ்.கே. நாதனின் 55 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு நோயாளர் விடுதிகளே இவ்வாறு பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டன.

(4-8-6-100-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய எல்லைக்குள் நுழைந்த ட்ரோனை சுட்டு வீழ்த்திய பொலிஸார்



(டில்லி)

ஜம்முவில் நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை வெடிமருந் துடன் நுழைந்த ட்ரோனை பொலிஸார் சுட்டு வீழ்த்தியதால் பெரும் விபத்து தடுக்கப்பட்டுள் ளது.

சர்வதேச எல்லைப் பகுதியி லிருந்து 6 கி.மீ. தொலைவில் கன்ஜக் என்ற பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ட்ரோன் பறந்துள்ளது. இதைக் கண்ட பொலிஸார் ட்ரோனை நோக்கி சுட்டதில், செயலிழந்து கீழே விழுந்தது. அந்த ட்ரோனி லிருந்து 5 கிலோ எடையுள்ள வெடிபொருளை கைப்பற்றினர்.

இது குறித்து ஜம்முவின் பொலிஸ், துணைத் தலைவர் முகேஷ் சிங் கூறியதாவது,

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ட்ரோன் கண்ட றியப்பட்டது. அந்த ட்ரோன் கீழ் நோக்கி தாக்குதல் நடத்த வரும்போது பொலிஸார் சுட்டு வீழ்த்தினர்.

அதிலிருந்து வெடிக்க தயா ராக இருந்த 5 கிலோ எடை யுள்ள ஐஇடி வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன. இதன்மூலம் பெரும் தாக்குதல் தடுக்கப்பட் டுள்ளது என்றார். (8-5)

## சர்ச்சைக்குரிய திபெத் பகுதிக்கு விஜயம் செய்த சீன ஜனாதிபதி




(பீஜிங்)

சர்ச்சைக்குரிய தன்னாட்சிப் பிராந்தியமான திபெத்திற்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த புதன்கிழமை விஜயம் செய்துள்ளார்.

ஜி ஜின்பிங் சீன ஜனா திபதியாகப் பதவியேற்ற பின் னர் திபெத்துக்கான அவரது முதல் பயணமாக இது அமை ந்துள்ளது.

அத்துடன், சீன ஜனாதிபதி ஒருவர் 30 வருடங்களுக்கு பின்னர் திபெத்துக்கு மேற் கொண்ட பயணமாகவும் இது பதிவாகியுள்ளது.

திபெத் தன்னாட்சி பிராந் தியத்தின் தலைநகரான லாசா பகுதிகளில் ஜி ஜின்பிங் கள ஆய்வில் ஈடுபட்டதாக சீன அரச ஊடகங்கள் தெரிவித்துள் ளன.

அமைதியான வழியில் சுத ந்திரம் அடைந்து விட்டதாக கடந்த 1951 ஆம் ஆண்டு திபெத் அறிவித்தது.

சீனாவால் தாம் ஒடுக்கப் படுவதாகவும் தமது கலாசா ரத்தை சீனா மெதுவாக அழித்து வருவதாகவும் சீனாவால் நாடு கடத்தப்பட்ட திபெத்தியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (8-5)



இங்கிலாந்தில் ஆயிரத்து 500 முகக் கவசங்களை பயன்படுத்தி இளம் பெண் அணியும் திருமண உடை அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

## உலகளவில் 75 சத

## டெல்டா வைரஸ்

### உலக சுகாதார அ

(ஜெனிவா)


**உலகம் முழுவதும் கொவிட் தொற்று உறுதியானவர்களிடம் பெறப்பட்ட மாதி ரிகளில் 75 சதவீதத்திற்கும் மேற்பட் டவை டெல்டா வைரஸ் திரிபினை சேர்ந்தவை என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

இந்தியா, சீனா, ரஷ்யா, இஸ்ரேல், பிரித்தானியா உள் ளிட்ட நாடுகளில் கடந்த 4 வாரங்களாக கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர் களிடம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வந் தன.


அவற்றில்டெல்டாவைரஸ் திரிபு என

## செவ்வாயில் உயிரின

### ஆய்வை ஆரம்



## உலகில் பயணத்திற்காக அதிகள தடுப்பூசி அஸ்ட்ராஜெனெகா-அ




(ஜெனிவா)

உலகளவில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொரோனாத் தடுப்பூசி அஸ்ட்ராஜெனெகாவின் ஊசி தான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாடுகளின் எல்லை கடந்த பய ணங்களுக்கு இரண்டு தடுப்பூசி போட்டுக் கொள்ளும் பயணிகளுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதில் அஸ்ட்ராஜெனெகாவே முன் னிலை வகிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ...தவீதமானோருக்கு ... தொற்று உறுதி

## ...அமைப்பு

தடுப்பூசி திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு இருப்பினும், சில நாடுகளில் நாளாந்தம் தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் கவலை வெளியிட்டுள்ளது. (8-5)



உறுதி செய்யப்பட்ட கொரோனா மாதிரிகளின் எண்ணிக்கை 75 சதவீதத்தை கடந்துள்ளது.

உலகம் முழுவதும் கொவிட்

# கொரோனா வைரஸ் குறித்த விசாரணையை சீனா நிராகரிப்பது பொறுப்பற்றது

## அமெரிக்கா கருத்து



(வோஷிங்டன்)

கொரோனா வைரஸின் தோற்றம் குறித்த 2 ஆம் கட்ட விசாரணையை சீனா நிராகரிப்பது பொறுப்பற்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இருப்பினும் கொரோனா வைரஸ் கிருமியின் தோற்றம் குறித்த மூலகாரணம் கண்டறியப்பட்டால், இந்த நோயை எதிர்த்து போராடுவதற்கான சுலபமான வழிகளைக் கண்டறிய முடியும் என நோய்த் தொற்று நிபுணர்கள் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில் கொரோனாவின் தோற்றம் குறித்து இரண்டாம் கட்ட ஆய்வுக்கு உலக சுகாதார அமைப்பு தயாராகி வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் இந்த முடிவை சீனா கடுமையாக நிராகரித்துள்ளது. கொரோனா வைரஸ் கிருமியானது ஆய்வகத்தில் இருந்து கசிந்தது என்ற கோட்பாடு பொது அறிவுக்கு எதிரானது என்றும் இது அறிவியலுக்கு எதிரான புரளி என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்த முடிவு மிகவும் ஏமாற்றம் அளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் ஜென் சாகி பேசுகையில், கொரோனா வைரஸின் தோற்றம் குறித்த 2 ஆம் கட்ட விசாரணைக்கான உலக சுகாதார அமைப்பின் திட்டத்தை சீனா நிராகரித்துள்ளது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சீனாவின் நிலைப்பாடு பொறுப்பற்றதாகவும் ஆபத்தானதாகவும் இருப்பதாக அவர் விமர்சித்தார். (8-5)

# ...னங்கள் இருந்ததா?

## ...ம்பிக்கும் நாசா

(வோஷிங்டன்)

செவ்வாய்க் கிரகத்திற்கு நாசா அனுப்பியுள்ள பெர்சிவெரன்ஸ் ரோவர், பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் அங்கு உயிர் படிமங்கள் இருந்த தற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய தயாராகி உள்ளது.

செவ்வாய்க்கிரகத்தின் ஜெசீரோ (Jezero) பள்ளத்தில் இருந்து மண் மாதிரிகளை சேகரித்து பூமிக்கு எடுத்து வந்து, அதன் மூலம் அங்கு நீர் இருந்ததா? என்று ஆராயப்படும் என்று கூறியுள்ள நாசா, கரியமில வாயு விலிருந்து ஒட்சிசனை பிரித்து எடுக்கும் மோக்ஸி என்றழைக்கப்படும் புதிய ஆய்வையும் பெர்சிவெரன்ஸ் ரோவர் மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லும் விண்வெளி வீரர்களுக்கு அங்கேயே ஒட்சிசன் வழங்கும் நோக்கில் இந்த புதிய ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. (8-5)

# சீனாவில் கண்டறியப்பட்ட 15,000 ஆண்டுகள் முந்தைய வைரஸ்

(பீஜிங்)

சீனாவில் உள்ள திபெத்திய பனிப்பாறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வைரஸ்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஒஹியோ மாகாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் பனிப்பாறைகள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தனர்.


கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கு சீனப் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து 22 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள பனிப்பாறையின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வந்தன.

ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட 2 பனிப்பாறைகளில் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வைரஸ்கள் இருந்தது தற்போது கண்டறியப்பட்டுள்ளது. பனிப்பாறைக்குள் நீண்டகாலமாக இருந்ததால் வைரஸ்கள் அழியாமல் இருந்துள்ளது என ஆராய்ச்சி குழுவின் தலைமை விஞ்ஞானியும், நுண்ணுயிரியியல் பேராசிரியருமான ஜி பிங் ஜாங் தெரிவித்துள்ளார்.

கண்டறியப்பட்ட வைரஸ்களில் 33 வைரஸ்களுக்கான மரபணு குறியீடுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 4 ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-5)

# ...ளவில் ஏற்கப்பட்ட ...ஆய்வு முடிவுகள்

எல்லா வகையான தடுப்பூசிகளும் கடல்கடந்த நாடுகளுக்குச் செல்ல ஏற்கப்படுவதில்லை. ஐரோப்பிய யூனியன் இந்தியாவில் உற்பத்தியாகும் கோவிஷீல்டை ஏற்க மறுத்தது. வெளிநாடுகளில் இருந்து வருவோரை தனிமைப்படுத்தப் போவதாக இந்தியா எச்சரித்ததையடுத்து 16 நாடுகள் கோவிஷீல்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளன. (8-5)




லண்டனில் ஜென்பேக்ட் என்னும் கார் தயாரிப்பு நிறுவனம் ஐஸ்கட்டியால் கார் ஒன்றை வடிவமைத்துள்ளது. கார்கள் பெருக்கத்தால் ஏற்படும் கால நிலைமாற்றம், உலக வெப்பமயமாதல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதிக நச்சு வாயு வெளியேற்றாத அளவு கார் தயாரிப்பை மேம்படுத்துவது குறித்தும் வலியுறுத்த இதை செய்துள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :- 4 158 208**

**தொற்று :- 193 739 449**

**(நேற்றைய மாலை நிலைவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மையும் பிறரையும் பாதுகாக்க தாமதிக்காது தடுப்பூசி செலுத்துங்கள்

## சுகாதார அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

**எந்த ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களே இதுவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டும் கொரோனாவால் உயிரிழந்தும் உள்ளார்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

தம்மையும் பிறரையும் பாதுகாக்க அனைவரும் தடுப்பூசி பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் சாத்தியமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வருகை தரும் மக்களின் எண்ணிக்கை சில தினங்களாக குறைவடைந்து காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.



இதுவரை கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழுந்துள்ளவர்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்பவர்கள் எந்த ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் என தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

அந்த நிலையில் மக்களின் உயிர்களை பாதுகாப்பதே அரசாங்கத்தின் ஒரே நோக்கம். 60 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் நோய்களோடு வாழ்பவர்கள் தடுப்பூசிகளைப்பெற்றுக் கொள்வது மிகவும் அவசியம் என்றும் அதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பிறரை பாதுகாக்கவும் முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# பேஸ்புக்கில் இளைஞரை ஏமாற்றி பணம் பறித்த மூன்று பிள்ளைகளின் தாய்

(கொழும்பு)

முகநூல் ஊடாக ஆண் ஒருவரை ஏமாற்றிப் பணம் பறித்து வந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ளையைச் சேர்ந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வேறு யுவதிகளின் அழகிய புகைப்படத்தைப் பயன்படுத்தி, முகநூல் கணக்கு ஆரம்பித்து, தனது தொழில் ஆசிரியர் எனவும், வயது 30 எனவுமே முகநூலில் குறிப்பிட்டு இளைஞர் ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளார்.

இவருடன் தொடர்பைப் பேணிய 32 வயது இளைஞர் சுமார் 9 இலட்சம் ரூபா வரை வங்கிக் கணக்கில் பல தடவைகள் வைப்பிலிட்டுள்ளார். பின்னர் பெண்ணின் தொடர்பு இல்லாமல் போயுள்ளது. குறித்த இளைஞரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே கைது இடம்பெற்றுள்ளது. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (நி-5)

# எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்க ரணில் திட்டம்

(கொழும்பு)


பாராளுமன்றத்திற்குள் எதிர்க்கட்சிகளுக்கு பொதுத் தலைமைத்துவம் வழங்கும் வகையிலான கலந்துரையாடல்களை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்க உள்ளார்.

இதன் முதற்கட்ட கலந்துரையாடலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடனான கலந்துரையாடல் அடுத்த வாரம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இதனடிப்படையில் பாராளுமன்ற செயற்பாடுகள் மற்றும் ஜனாநாயக விழுமியங்கள் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் பொது நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்பட உள்ளது.

இதனை மையப்படுத்தி பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து எதிர்க்கட்சிகளையும் சந்தித்து கலந்துரையாடப்படும்.

அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பின் போது ஏற்பட்ட நெருக்கடிகளில் பொது நிகழ்ச்சி நிரலுக்குள் எதிர்க்கட்சிகள் ஒன்றி



ணைய வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆளும் கட்சியின் கிராமிய மட்டத்திலான தலைவர்கள் அரசாங்கம் மீது கடந்த காலங்களில் விரக்தி நிலையைக் கொண்டிருந்தனர். ஆனால் நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிகொள்ளப்பட்ட பின்னர் அந்த நிலைமை மாறியுள்ளது.

பல துறைகளிலும் வீழ்ச்சியை கொண்டிருந்த அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் உள்ளதாக வாக்கெடுப்பு முடிவுகள் எண்ணவும் வைத்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே அனைவரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியமும் இங்கு உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2360

Search for people, places and things


### சரவணா

EB-க்கு போன் பண்ணி மழை நின்று
8 மணி நேரம் ஆச்சே கரண்ட்
எப்போ வரும்னு கேட்டா
உன் போன்ல இன்னுமா சார்ஜ்
நிக்குது என்ன மாடல்னு கேட்கிறாங்க..அடேய்..



### ஸ்ரீமத்

ஹலோ சார் நான் வீணா பேசுறேன்...
வீணா எதுக்குமா பேசுற.எதாவது
பிரயோஜனமா பேசுமா..



### விஷ்வா

படிக்ககாசில்லாம படிக்கிறத நிறுத்துனவங்க
நிறைய பேர்... ஆனால்
குடிக்க காசில்லாம .ஒருத்தன் குடியை
நிறுத்தினதா சரித்திரமே இல்ல..



### சுலக்சனா

ஆசிரியர்- முடியாது என்பது முட்டாளின் வார்த்தை..
மாணவன்- சார்... நாங்க இப்ப வீட்டுக்குப் போக வேண்டும்
அனுப்ப முடியுமா.? முடியாதா?



### ருக்சாயினி

இப்டி Online class னு கூட
பாக்காம Snacks சாப்பிட்டு இருக்க
நீங்க மட்டும் எங்களுக்கு exam நடக்கும் போது
Tea யும் வடையும் பாக்க வச்சி சாப்டீங்களே..




### விநோயா

கட்டுன புடவையோட..தானே உன்ன வர சொன்ன..
சூட்கேஸோட வந்துருக்க...
இது எல்லாம் நான் கட்டுன புடவை தான்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்யப்பட்ட பொலித்தீன் உற்பத்திகள் தொடர்பில் விசேட சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தடை செய்யப்பட்டுள்ள பொலித்தீன் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறியும் விசேட சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பீ.பி. ஹேமந்த ஜயசிங்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 20 மில்லி மீற்றர் அல்லது 20 கிராமுக்கும் குறைவான நிறையுடைய செசே பைக்கற்றுக்கள் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் தடை செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் தொடர்ந்தும் அவ்வாறான தடை செய்யப்பட்ட பொலித் தீன் உற்பத்திகளில் சில நிறுவனங்கள் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, கெஸ் பேவ - ஜம்புரெலிய பகுதியில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் தடை செய்யப்பட்ட 3,000 செசே பைக்கற்றுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

குறித்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித் தார்.

அதேநேரம், சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள தடை செய்யப்பட்டுள்ள செசே பைக்கற்றுக்கள் இருப்பின் அதனை உடனடியாக அகற்றுமாறும் மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

(நி-5)

# சிறுவர் உரிமை தொடர்பில் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு தேவை

## பிரபா கணேசன்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி உயிரிழந்த விவகாரத்தில் றிசாத்தை குறிவைத்து முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன், சிறுமியின் பெற்றோர்களுக்கு தகுந்த பாடம் எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் றிசாத் வீட்டில் பணிபுரிந்த சிறுமிக்கு ஏற்பட்ட அவலம் கவலைக்குரியதெனவும் இது தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நேர்மையாக முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அவ்வாறு தண்டிக்கப்பட்டால் மலையக பெற்றோர்கள் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்த அவர், சிறுமியை வேலைக்கு அனுப்பியமைக்கு அவரது தாயார் கூறும் காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.


றிசாத்தை குறிவைத்து முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும். எனினும் வீட்டின் தலைவர் என்ற வகையில் இச்சம்பவத்துக்கு அவர் பதிலளிக்க வேண்டும்.



அரசியல் ரீதியான போராட்டங்கள் தேவையற்றது என தெரிவித்துள்ளதோடு, மலையக சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுவது நிறுத்தப்பட்டு, அவர்களது அறிவு வளர்க்கப்பட வேண்டும். இதற்கான விழிப்புணர்வுத் திட்டங்கள் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

## மலையக சிறுமியின் மரணம்

# றிசாத்தின் மனைவி உட்பட மூவர் பொலிஸாரால் கைது



(கொழும்பு)

டயகம பகுதியைச் சேர்ந்த (வயது-16) சிறுமியின் மரணம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் மனைவியான ஷெஹாப்தீன் ஆயிஷா (வயது-46) மற்றும் மனைவியின் தந்தையான மொஹமட் ஷெஹாப்தீன் (வயது-70) வேலைக் கமர்த்திய தரகர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

(நி-5)

# கப்பலில் இருந்து தொடரும் எண்ணெய்க்கசிவு

(கொழும்பு)

கொழும்பு கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த 'எக்ஸ் பிரஸ் பேர்ள்' கப்பலில் இருந்து தொடர்ந்தும் எண்ணெய் கசிந்து கொண்டிருப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

சுற்றுச்சூழல் நீதி மையத்தின் நிர்வாக இயக்குநர் ஹேமந்த விதானகே நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 'எக்ஸ் பிரஸ் பேர்ள்' கப்பல் பேரழிவைத் தொடர்ந்து 275 இற்கும் மேற்பட்ட கடல் ஆமைகள் இறந்துவிட்டன எனக் கூறப்படுகின்றது. ஆனால் கடல் ஆமை இறப்புகளின் உண்மையான எண்ணிக்கை 2 ஆயிரத்துக்கும் மேல் இருக்கலாம். அதேபோல் சுமார் 45 டொல்பின்களும் இறந்துவிட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எண்ணெய்க்கசிவு காரணமாக அதிகமான மீன்கள் இறந்ததனால் பல மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது கிடைத்த தகவல்களின்படி, கடல் மட்டத்திலிருந்து சுமார் இரண்டு முதல் மூன்று மீற்றர் தொலைவில் உள்ள ஒரு துவாரத்திலிருந்து எண்ணெய் வெளியேறுகின்றது. இந்தக் கசிவை நிறுத்த முடியும்.

எனவே இந்த கசிவை நிறுத்துவதற்கு நாங்கள் நீண்ட காலம் காத்திருக்க முடியாது. கசிவை சமாளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அரசியின் பரிசு

ஒரு பெரிய பியானோ கலைஞர் வியான்னாவிலே இருந்தார். மிகவும் புகழ்பெற்ற இசைக் கலைஞர் அவர்.

இங்கிலாந்து மகாராணி விக்டோரியா அவருடைய சங்கீதத்தைக் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். பியானோ வாசிக்கச் சொல்லிக் கேட்டார்கள்.

இவரும் ரொம்பப் பிரமாதமாக வாசித்தார். பாராட்டி பரிசில்கள் எல்லாம் கொடுத்து அனுப்பினார்கள்.

அந்த இசையைக் கேட்கிறதில் அரசிக்கு ரொம்பவும் ஆர்வம் உண்டு. அதனாலே அதன் பிறகும் அந்த கலைஞர் அடிக்கடி அரண்மனைக்கு வருகிறது உண்டு. பாடி வாசிக்கிறது உண்டு.

ஒரு தடவை மகாராணி அவரைப் பார்த்து. "உங்க நாட்டு தேசிய கீதம் பாடுங்கள்!" என்று கேட்டாராம். உடனே அவர் தனது நாடான ஆஸ்திரியாவின் தேசிய கீதத்தை பாடியிருந்தார். அவர் பாட ஆரம்பித்தவுடனே மகாராணி எழுந்து நின்றார்.

அதற்கு மரியாதை செலுத்தும் நோக்கத்துடன் பாட்டு முடியும் வரைக்கும் அப்படியே நின்று கொண்டிருந்தார்.

அந்த முதிய கலைஞரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதற்குப் பின்பு அந்தப் பியானோ கலைஞர் ஒரு நாள் தன்னுடைய நண்பர் ஒருத்தரிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது சொன்னார்... "மகாராணியார் எனக்கு எவ்வளவோ பரிசுகள் கொடுத்திருந்தார். ஒரு தடவை எனக்கு வைரக்கல் பதித்த அணி ஒன்றைப் பரிசாக கொடுத்தார். ஆனால் அதனைவிட உயர்ந்த விலை மதிக்க முடியாத அணி எது தெரியுமா?

எனது நாட்டுத் தேசிய கீதத்தை நான் பாடும் போது அவர் எழுந்து நின்று மரியாதை செலுத்தினாரே! அது தான் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு!" என்று சொன்னார்.

எனக்குத் தெரிந்த சங்கீத வித்துவான் ஒருத்தர் இருக்கின்றார். சமீபத்திலே ஒரு நாள் அவரைப் பார்த்தேன்.

"எப்படி போய்க் கொண்டிருக்கின்றது உங்களுடைய தொழில்?" என்றார்.

"ரொம்பவும் வித்தியாசமாகப் போய்க் கொண்டிருக்கிறது" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்" என்றேன்.

"முன்பெல்லாம் நான் பாடினால் எதிரிலே இருக்கிறவர்கள் தான் எழுந்து போவார்கள்.

இப்போது எப்படி என்றால் நான் பாட ஆரம்பித்த உடனே பக்க வாத்தியக்காரனே எழுந்து போய் விடுகிறான்" என்றார்.

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

35

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அரச காணியை இவ் அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்க அவசியமேற்படுகையில் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் 17 இன்(1) ஆம்பிரிவில் குறிக்கப்பட்டபடி அரச காணிக்கட்டளைச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் படி விசேட வழங்கலாக அல்லது குத்தகையாக வழங்கலாம்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கைமாற்றப்படுகின்ற காணித் துண்டொன்று தொடர்பில் வழங்கப்படுகின்ற எத்தகைய சிறப்பு அளிப்புகளிலும் அல்லது சிறப்பு குத்தகைகளிலும் உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைக்காக காணியானது பயன் படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் காணியானது அத்தகைய குறித்த நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படாத விடத்து காணியின் உரித்தானது அரசினால் மீளப் பெறப்படும் என்னும் நிபந்தனை யொன்றும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏதேனும காணித் துண்டொன்று சுவீகரிக்கப்பட்டுள்ள விடத்து காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44(1) இன் கீழ் கைமாற்றச் சான்றிதழ் ஒன்றினால் காணித் துண்டானது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங் கப்படுதல் வேண்டும். (land manual).

### நகர அபிவிருத்தி திட்டங்கள் 1980 ஆம் ஆண்டின் இல.2 (விசேட ஏற்பாடுகள் (Urban Development Projects [Special Provisions] Act.

காணிகள் சுவீகரிப்பதை துரிதப்படுத்துவதற்காக 1980 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி திட்டங்கள் ஐ விசேட ஏற்பாடு கள் சட்டம் உருவாக்கப்பட்டது. நகர்ப்புற வளர்ச்சிக்கு பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதிஅவர்களால், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கத்திற்காக எந்த குறிப்பிட்ட நிலங்களும் அவசர அவசரமாக தேவைப்பட்டால், அத்தகைய நிலங்களை அவர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒரு உத்தரவின் பிரகாரம் தேவையென அறிவிக்க முடியும். மேலும், இச் சட்டத்தில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு அகற்றப்பட்டுள்ளதோடு உச்ச நீதிமன்றத்தினால் இரண்டு மாதங்களுக்குள் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்படும். இதனால் பாதிக்கப்பட்டவர்களின் மேல்முறையீட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

### நகரக் குடியமர்த்தல் அபிவி ருத்தி அதிகார சபைச் சட்டம்.- 2008 ஆம் ஆண்டின் இல. 36 (National Settlement Development Authority Act)

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டது. இச்சட்டத்தின் பாகம் 4 இல் காணிகளைக் கையேர்த்தல், கொள்ளுதல் மற்றும் அதிகார சபைக்குச் சொந்தமான காணிகள் போன்றவை பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஓர் உள்ளூராட்சிச் சபைக்கு அல்லது கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணியொன்றிலுள்ள அக்கறை அதிகாரசபைக்கு தேவையென கருதினால், காணியின் அவ் அக்கறையை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரசபைக்கு உரித்தாக்கலாம். அரச காணியொன்று அதிகாரசபைக்கு தேவைபடபடுமிடத்து அரசகாணி கட்டளைச் சட்டத்தின் மூலம் அதிகாரசபை பெறமுடியும். அவ்வாறு எடுக்கப்படும் காணிகளை, எடுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப வாடகை, குத்தகை, விற்றல், பராதீனப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை அதிகாரசபையினால் செயற்படுத்த முடியும்

நகர மற்றும் கிராம திட்டமிடல் கட்டளைச் சட்டம் -1946 இல் 13 (சட்டத் திருத்தம் - 1950 இல் இல. 9,1953இல் இல. 29, 1955ல்இல. 10, 1955ல்இல. 22, 2000ல் இல. 49)- **(Town and Country Planning ordinance)**

இலங்கையிலுள்ள காணிகள் தொடர்பில் திட்டங்களை ஆக்கவும், அபிவிருத்தி செய்யவும் அதிகாரமளித்த இயற்கை வளங்களைப் பேணவும், கட்டிடங்களையும், அக்கறை யேற்படுத்தும் அரும் பொருட்களைப பாதுகாக்கவும் வழிவகுக்கும் இக் கடடளைச் சட்டமானது அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்குமான ஏற்பாடுகளை கொண்டது. மேற் கூறப்பட்ட சட்டங்களின் மூலம் மாகாண சபைகளின் கீழ் உள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளின் சில காணி அதிகாரங்கள் நகர அபிவிருத்தி அதி காரசபையினால் அபகரிக்கப்பட்டு விட்டன.

### சுற்றுலாத்துறைச் சட்டமும் காணி அதிகாரமும் சுற்றுலாத்துறைச் சட்டம் 2005- இல.38

இலங்கை சுற்றுலாச்சபை, 1966 ஆம் ஆண்டின் இல.10 இலங்கை சுற்றுலாச்சபை சட்டத் தின்படி உருவாக்கப்பட்டது. இச் சட்டம், சுற்றுலா அபிவிருத்தி நோக்கங்களுக்காக இழப்பீடு மூலம் காணியைப் பெற இலங்கை சுற்றுலாச் சபையை அனுமதித்தது.

1968 இன் 14 ஆம் இலக்க உல்லாசப் பயண அபிவிருத்திச் சட்டத்தின் 4(1) பிரிவின் கீழ் இலங்கை உல்லாசப் பயணக் கூட்டுத்தாபனத்துக்கு அரச காணி ஒன்றை பராதீனம் செய்ய அச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பாக அதற்குப் பொறுப்பான அமைச்சர் நடவடிக்கை எடுப்பார். எடுக்க உத்தேசித்திருக்கும் காணியை அளக்கச் செய்து வரைபடத்தைத் தயாரித்துக் கொள்ள மேற்கூறிய சட்டத்தின் 5ஆவது பிரிவிலே இலங்கை உல்லாசப் பயண கூட்டுத்தாபன தலைவருக்கு அதிகாரம் உண்டு.

50 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்த 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க் இலங்கை சுற்றுலர்ச் சபைச் சட்டத்திற்கு பதிலாக 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம் **(The Tourism Act)** ஒக்டோபர் 2007 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. சுற்றுலாத் துறைச் சட்டம் 2005- இல.38 இன் பிரிவு 26 இன் படி, சுற்றுலா அதிகாரசபைக்கு ஒரு சுற்றுலா அபிவிருத்தி பகுதி தேவைப் படும்போது அதிகாரசபையின் பரிந்துரையின் பேரில் அமைச்சரால் அப்பகுதியை ஒரு சுற்றுலா அபிவிருத்தி பகுதி என பிரகடணம் செய்யலாம். பிரிவு 26 இன் படி பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி 10 வருட காலத்திற்கு சுற்றுலா அதிகாரசபைக்கு அபிவிருத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கையுதிர்த்தல் (vesting) செய்யப்டும்.

கையுதிர்த்தல் செய்யமுன் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டம் **(National Environmental Act, No. 47 of 1980)** மற்றும் தொன்மைக் கட்டளைச் சட்டம் (188 ஆம் அத்தியாயம்) **(Antiquities Ordinance (Chapter 188))** ஆகிய சட்டங்களுக்கு அமைவாக அனுமதி பெறப்படல் வேண்டும். ஆனால் இங்கு மாகாண சபையின் அனுமதி பெற வேண்டுமென்று எவ் விடத்திலும் கூறப்படவில்லை.

### 13 ஆவது திருத்தத்தின்படி மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கு இடையேயுள்ள காணிஅதிகாரம் பற்றிய ஓர் அலசல்

இவ் அலசலில் கூறப்படும் பல விடயங்கள் முன்கூறப்பட்டவையாகும். மாகாண சபையானது அப் பிரதேசத்தினுள் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்நோக்கினை நிறைவேற்றுவதற்காக அரசியல் யாப்பின் 9ஆம் அட்டவணை பிரயோகிக்கப்படும். அதில் 03 நிரல்கள் உள்ளன.

1 ஆவது நிரல் மாகாண சபை நிரல் எனப் பெயர் கூறப்படுவதோடு மாகாண சபைகளுக்கான 37 விடயங்கள் அதில் இடம் பெறுகின்றதோடு 18 ஆவது விடயமாக் காணப்படுவது காணி. அதில் "காணியும் காணிக் குடியேற்றமும்" என்ற தலைப்பில் அரசகாணி பராதீனப்படுத்தல், பகிர்தல், நிர்வகித்தல், கட்டுப்படுத்தல், பயன்படுத்தல் என்பன பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. எனவே இது மாகாண சபையானது அப்பிரதேசத்தினுள் காணி நிர்வாகம் செய்யமுடியும் என்பதைக் காட்டுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களை தொழிலுக்கு இணைக்கும் வயதெல்லையை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

**ஊழியர்களை தொழிலுக்கு இணைத்துக்கொள்ளும் வயதெல்லையை 16 இல் இருந்து 18 ஆக அதிகரிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.**

இதற்கமைய, மேலும் இரண்டு மாதங்களில் அதனை பாராளுமன்றில் முன்வைத்து சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. 1956 ஆம் இலக்க 47 ஆம் சரத்தின் படி, 14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொழில்களுக்கு செல்லும் சந்தர்ப்பம் காணப்பட்டது. எவ்வாறாயினும், கடந்த ஜனவரி மாதம் தொழிலுக்கு செல்வதற்கான வயதெல்லை 16 ஆக அதிகரிக்கப்பட்டது.

இதன்படி, 16 வயதுடைய ஒருவரை வேலைக்கு அமர்த்தினாலும் அவரை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், சிறுவர் தொழிலாளர்களை இல்லாது செய்யும் நோக்கில் புதிய திருத்தத்தின் அடிப்படையில் ஊழியர்களை தொழிலுக்காக உள்வாங்கும் வயதெல்லையினை 18 ஆக உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை ஆபத்துக்கள் நிறைந்த 52 தொழில்கள் கண்டறியப்பட்டுள்ளதோடு, புதிய திருத்தத்தின்படி 76 தொழில்கள் ஆபத்துக்கள் நிறைந்த தொழில் பட்டியலில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.

தொழில், நீதி மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து இந்த திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## சகல வளங்களும் தரும் திருவாதிரை



**விசாகத்தன்று நடனமாடிய சிவபெருமான்**

மார்க்கண்டேயன் சிவபெருமானின் திருக்கூத்தைக்காணவேண்டி தவம் செய்ய விரும்பினான். மழப்பாடியில் ஒரு இடத்தை தேர்வு செய்து தவத்தை தொடங்கினான். ஐந்தெழுத்தை எண்ணியபடி ஒற்றைக்காலில் நின்று தவம் புரிந்தான்.

அவரது தவக்கனல் உலகம் முழுவதும் பரவியது. தேவர்களும், முனி வர்களும் அந்த வெப்பத்தில் இருந்து தம்மை விடுவிக்க வேண்டி இறைவனை நாடிகயிலைக்கு சென்றனர். அவர்கள் இறைவனிடம் முறையிட, சிவபெருமான் உமாதேவியுடன் விநாயகர், முருகன் ஆகியோர் உடன் வர மழப்பாடி வந்தார்.

முழுமுதற்கடவுளை நேரில் கண்டு பரவசம் அடைந்த மார்க்கண்டேயன் பலவாறு போற்றித்துதித்தார். பின்னர் திருக்கூத்தினை ஆடியருள வேண்டும் என விண்ணப்பித்து கொண்டார்.

ஈசன் மார்க்கண்டேயனிடம் வைகாசி விசாகத்தன்று திருக்கூத்தை நிகழ்த்தி காட்டுவோம். அதுவரை நீ தவத்தினை தொடர்ந்து செய்து வருவாய் என்று கூறி மறைந்தார்.

வைகாசி விசாகத்தன்று சிவபெருமான் மழுவினை திருக்கையில் ஏந்தி நடனமாடினார். மார்க்கண்டேயர் திருக்கூத்தை கண்டு வணங்கி மகிழ்ந்து ஒவ்வொரு ஆண்டும் இதே நாளில் இத்தலத்தில் திருக்கூத்தினை நிகழ்த்தியருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இறைவனும் அவ்வாறே ஆகட்டும் என திருவாய் மலர்ந்தருளினார்.


அவ்வாறே ஒவ்வொரு ஆண்டும் திருக்கூத்தினை ஆடிவரலானார். அதனால் இத்தலம் 'மழுவாடி' எனும் பெயரை பெற்றது.

'பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கிசைத்து' என சுந்தரர் பாடிய புகழ்பெற்ற தேவார பாட லுக்கு சொந்தமான மழுவாடி திரு மழப்பாடி என அழைக்கப்படுகிறது. இத்திருத்தலம் அரியலூருக்கு தெற்கில் 28 கி.மீற்றர் தூரத்திலும், தஞ்சை மாவட்டம் திருவையாறில் இருந்து 15 கி.மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. திருச்சி, லால்குடி, அரியலூர், தஞ்சையில் இருந்து பஸ் வசதி உள்ளது. வைகாசி விசாகத்தன்று இங்கு விழா விமரிசையாக நடைபெறும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## அவசர சிகிச்சைப் பிரிவிற்குள் நுழைந்த நாகபாம்பு



(கொழும்பு)

கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவுக்குள் நேற்று முன்தினம் நாக பாம்பு ஒன்று நுழைந்தமையினால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் மருத்துவமனையின் பாதுகாப்பு ஊழியர்கள் பெரும் முயற்சிகளுக்கு பின்னர் பாம்பை பாதுகாப்பாக பிடித்து ஒரு போத்தலில் அடைத்து காட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்று விட்டதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 152 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் 51,733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 7 ஆயிரம் பேர் மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 180 | 200 |
| தக்காளி | 140 | 125 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 180 | 160 | 160 | 200 |
| கரட் | 180 | 150 | 160 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 120 |
| புடோல் | 100 | 90 | 100 | 160 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 280 | 350 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 220 | 200 | 480 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 180 | 160 |
| பயற்றங்காய் | 180 | 150 | 120 | 120 |
| லீக்ஸ் | 180 | 190 | 180 | 240 |
| பீற்றூட் | 140 | 150 | 120 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 240 | 320 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 200 | 240 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 120 | 130 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 50-80 |
| இராசவள்ளி | — | — | 300 | — |
| வெங்காயப்பூ | 180 | 180 | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 100 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கே கோபுரக் கலசம்?



அன்று ஊர் மத்தியில் பொது மேடை அமைக்கப்பட்டு, அதில் மன்னரும் மந்திரிகளும் அமர்ந்திருந்தனர்.

மேடைக்கு எதிரே ஒரு பெரிய கொப்பறை வைக்கப்பட்டிருந்தது. கொப்பறையில் நீர் நிரப்பப்பட்டு, அதிலிருந்து குபுகுபுவென ஆவி வந்துகொண்டிருந்தது.

பொது இடத்தில் ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இருந்தனர். அவர்களிடம் ஒரு விதமான அச்சமும் பீதியும் ஏற்பட்டிருந்தது. மேடையில் அமர்ந்திருந்த மந்திரி எழுந்தார்.

"பொது மக்களே, நம் புராதன ஆலயத்தின் கோபுரக் கலசம் திருடு போன விடயம் நீங்கள் அறிந்ததே.

இப்போது நாம் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்காகக் கூடியிருக்கிறோம். இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதோ இந்தக் கொப்பறையில் உள்ள நீர் நியாயதேவதையின் அருள் பெற்றது. இதில் நீங்கள் உங்கள் இரு கைகளையும் நனைக்க வேண்டும்.

குற்றமற்றவர்களை இந்த நீர் எதுவும் செய்யாது. குற்றவாளியின் கைகளை வேக வைத்துவிடும். அவர்கள் கைகள் புண்ணாகிச் சிறிது காலத்தில் அழுகி, துண்டாகி விடும். இப்போது எல்லோரும் தங்கள் கைகளை நனைக்க வர வேண்டும்"என்றார்.

திருடரைக் கண்டுபிடிக்கும் முயற்சி ஆரம்பமானது. மக்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து கொப்பறை நீரில் கைகளை நனைத்துவிட்டு, கொதிநீர் தங்களை எதுவும் செய்யவில்லை என்று மகிழ்ச்சியுடன் சென்றனர்.

(தொடரும்)

# மகாபாரதம்




அரச தண்டனை என்பது செங்கோலின் ஒரு பகுதி என்பதை மறக்கக்கூடாது. தண்டனைக்குப் பயந்துதான் ஒருவரை ஒருவர் துன்புறுத்தாது உள்ளனர்.

குற்றத்திற்கு சரியான தண்டனை வழங்காவிடின் உலகம் காரிருளில் மூழ்கிவிடும்.

அடங்காமல் இருப்பவரை அடக்குவதும் தவறு செய்பவரைத் தண்டிப்பதும் நீதியாகும்.

கொடியவர்களைக் கொல்லத் துணியாத வேந்தனுக்கு புகழும் இல்லை, செல்வமும் இல்லை.

விருத்தன் என்னும் அசுரனைக் கொன்றுதான் இந்திரன் மகேந்திரன் ஆனான்.

பிற உயிரைக் கொல்லாமல் எந்த பிராணியும் உயிரோடு இருப்பதில்லை. இப்படி ஒவ்வொரு உயிரும் பிறவுயிரின் உணவாகின்றது.

உயிரினங்களின் படைப்பின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளுங்கள். எல்லா உயிர்களும் ஒவ்வொரு தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளன. [illegible]த்தவரின் வாழ்வு நிலையைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஷத்திரியர்களின் தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள். ஷத்திரியன் அறிவின்மையால் சினத்தையும் மகிழ்ச்சியையும் துறந்து காடு சென்று கடுந்தவம் புரிந்தாலும் காய், கிழங்குகள் இன்றி காலம் தள்ள முடியாது.

நீரிலும், பூமியிலும், பழங்களிலும் பல உயிர்கள் இருக்கின்றன. நாம் கண் இமைத்தலால் உயிர் இழக்கத் தக்க நுண் உயிர்கள் காற்றில் ஏராளமாக இருக்கின்றன. உலகில் அவற்றைக் கொல்லாமல் யார் இருக்கின்றனர்.

ஆகவே உயிர்க் கொலை என்பது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. அரசனாக இருப்பவன் சில கொலைகளைச் செய்தே ஆக வேண்டும்.

இல்லையெனில் பகைவர்களை அடக்க முடியாது. அது மட்டுமன்றி, சரியான தண்டனை இல்லையெனில் யாரும் கல்வி கற்க மாட்டார்கள். வண்டியில் கட்டிய மாடுகள் கூட தண்டனை இல்லாவிடின் வண்டியை இழுக்காது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அறத்தின் வழி நில்! அஞ்ச வேண்டாம். உன் இலட்சியமெல்லாம் உன் தேசத்தை, உன் கடவுளை, உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும்.*

*– ஷேக்ஸ்பியர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் இனத்தின் பேரால் ஒற்றுமை வளர்க்கப்பட வேண்டும்

நாம் தமிழர் என்று தன் கட்சிக்குப் பெயர் வைத்தவர் சீமான்.

நாம் தமிழர் என்ற நாமத்துக்குள் ஓர் உத்வேகம் இருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

தவிர, சமய பேதம் என்பதற்கு அந்தக் கட்சியில் இம்மியும் இடமில்லை.

மாறாக முருகன் எங்கள் முப்பாட்டன். நம் தமிழ் இனத்தை ஆண்ட தலைவன். மாவெரும் வீரன் என்று மதங் கடந்த விளக்கத்தை முன்வைத்து சீமான் ஆற்றுகின்ற உரைகள் தமிழகத்து இளைஞர்களிடம் மிகப்பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதன் வேகம் ஈழத் தமிழ் மக்களையும் வசப்படுத்தியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய தமிழர்கள் நாம் தமிழர் என்ற கோசத்தோடு எமக்குள்ளான ஒற்றுமைக்கு அடித்தளமிட வேண்டும்.

இல்லையேல் தமிழ் என்ற இனப்பற்று அறுந்து சமய பேதங்கள் எம் இனத்தின் மூல வேரை முறித்துவிடும்.

ஆகவே இது விடயத்தில் தமிழ் அமைப்புகள் கடுமையாகச் சிந்திக்க வேண்டும்.

இலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழ் இனத்துக்கு எதிராகத் திட்டம் தீட்டுவதில் எப்போதும் கருசனையாக இருப்பர் என்பது நீண்ட நெடுங்கால அனுபவம்.

ஆகையால் அவர்கள் தொடர்பில் நாம் விழிப்பில்லாமல் இருப்போமாயின், எம் இனத்தின் இருப்பு என்பது கேள்விக்குரியதாகிவிடும்.

ஆம், 1983 ஜூலைக் கலவரத்தின் 38 ஆவது ஆண்டு நினைவை இக்காலம் எமக்குச் சுட்டி நிற்கிறது.

தமிழ் இனத்தைச் சங்காரம் செய்வதற்கான திட்டமிடலின் அரங்கேற்றம் ஜூலைக் கலவரமாக வெடித்து தமிழ் இனத்தை வேரறுத்தது.

இந்தக் கறுப்பு நினைவுகள் மறக்கப்படக் கூடியவை அல்ல.

அதேவேளை பேரினவாதம் தமிழ் இனத்துக்கு இழைத்த கொடுமைகள் ஏராளமாக இருந்தபோதிலும் அவை குறித்து ஆட்சித் தரப்பினர் இம்மியும் கவலை கொண்டதாக வரலாறில்லை.

மாறாக தமிழர்கள் எங்களின் அடக்குமுறைக்கு உட்பட்டவர்கள். ஆகையால் தேசிய கீதத்தில் தமிழுக்கு இடமில்லை என்ற வக்கிரம் வெளிப்படுத்தப்பட்டது.

உண்மை, இப்போதுகூட வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக சிங்கள இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சிங்களவர் ஒருவரை நியமிப்பதென்பதற்கு முன்னதாக, வடக்குத் தமிழ் மக்களின் அபிப்பிராயங்கள், அவர்களின் மனநிலை என்ற விடயங்கள் கவனிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் எதுவும் கவனிக்கப்படாமல் அந்த நியமனம் நடந்துள்ளதெனும்போது, இவை இன்னும் பல சம்பவங்கள் நடக்கப் போவதற்கான அறிகுறி என்பது உணரப்பட வேண்டும்.

ஆக, இந்த வெளிப்பாடு தமிழ் இனத்தின் பேரால் எங்கள் ஒற்றுமையை வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இல்லையேல் கவலைப்படுவதைவிட தமிழ் மக்களுக்கு வேறு எதுவும் இல்லை என்றாகிவிடும்.

# வடமராட்சி கடற் பிரதேசத்தில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி

## அமைச்சர் டக்ளஸ், கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் உடனான கலந்துரையாடலில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற் பிரதேசத்தில் கடலட்டை தொழிலுக்கான அனுமதியை வழங்கியுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

வடமாராட்சி பிரதேச கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த விடயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சரின் யாழ். செயலகத்தில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

பிரதேச மக்களில் பெரும்பாலானவர்களின் கருத்தினை கடற்றொழிலாளர் சங்கங்கள் பிரதிபலிக்கின்றன என்ற வகையிலும், மக்களின் தற்போதைய பொருளாதார நிலைமையையும் கருத்தில் கொண்டு, கடற்றொழில் திணைக்களத்தினால் வரையறுக்கப்படும் நிபந்தனைகளை பின்பற்றி கடலட்டை தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்குவதாக தெரிவித்தார்.

மேலும், மக்களின் நலன்களின் அடிப்படையிலேயே தன்னுடைய தீர்மானங்கள் அமையும் என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர், வெளிச்சம் பாய்ச்சுதல் குலை போட்டுப் பிடித்தல் போன்ற தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை முற்றாக தடை செய்வதற்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும், கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற படகுகள் பதிவு செய்யப்படும் என்று வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா 40 குதிரை வலுவிற்கு உட்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார். (ம-3)

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் செயற்பாடுகளை இலங்கை முன்னெடுக்க முடியாது

## ஐ.தே.கட்சி தலைவர் ரணில்

(கொழும்பு)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல், பொருளாதாரம் மற்றும் அண்மைய நாடு என்ற ரீதியில் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையில் நெருங்கிய உறவு நிலை காணப்படுகிறது.

ஆகவே இந்தியாவை ஒருபோதும் புறக்கணிக்க முடியாது. ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும். சீனா அனைத்து நாடுகளுக்கும் உதவி செய்யாது. இலங்கை பொருளாதாரத்தில் எதிர்பார்க்கத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்தால் தான் சீனா இலங்கைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும்.

தற்போதைய சூழ்நிலையில் சீனாவை தவிர பிறிதொரு நாடுகள் இலங்கைக்கு உதவி செய்யாது. வெளிவிவகார கொள்கை பிற நாடுகளின் தேவைக்கேற்ப வகுக்கக் கூடாது.

அரசாங்கம் வெளிவிவகார கொள்கையினை பிற தரப்பினருக்கு ஏற்றாற்போல் மலினப்படுத்தியுள்ளது என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 25 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** ஏழாலை, கட்டுவன், கட்டுவன்புலம், குப்பிழான், மயிலங்காடு, சூறாவத்தை, சுன்னாகம் புகையிரத நிலைய வீதி மணியம் கடையடி, தோப்பு ஏழாலை, டெலிகொம் சுன்னாகம், கடற்கரை வீதி பழைய பூங்கா வீதிச் சந்தி, டேவிட் வீதி கடற்கரை வீதி, குருநகர், குருநகர் கடற்கரை வீதி, சீனோர் குருநகர், ஐஸ் தொழிற்சாலை [illegible] வீதி, [illegible] ஐஸ் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர் வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறை வேட் லிமிட்டட் (கடல் உணவுக் களஞ்சியம்) பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர்வழங்கல்- தோட்டக்காடு, இளைஞர் படை பயிற்சி மையம்கார்கில்ஸ் பூட் சிட்டி, மன்னார், இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், தள்ளாடி டயலொக், நடுக்குடா, பேசாலை- ஐஸ் தொழிற்சாலை, கொன்வெண்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மூர் வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர்சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, படப்பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப் பண்ணை, பாவிலுப் பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, பகையிரத நிலையம்- சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநா வற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவமுகாம், மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்பு திட்டம், மன்னார் யுசி மைதானம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–315

## சிறுகக் கட்டி பெருக வாழ் : உணவுக்குள் ஊட்டச்சத்தும் வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உலகளவில் உணவினை உற்பத்தி செய்வதற்கு ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உலக உணவு மற்றும் விவசாய தாபனம் பாரிய வேலைத் திட்டங்களை உள்வாங்கி அனைத்து நாடுகளிலும் உணவுற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பலத்த பிரயத்தனம் எடுத்துக்கொள்வதனை அவர்களது வருடாந்த மற்றும் அடுத்த ஐந்தாண்டு கால செயுற்றிட்டங்களிலிருந்து கற்றுக் கொள்ளலாம். இம்முறை 2022 இலிருந்து 2031 வரையான பத்தாண்டு காலப் பகுதியில் உணவுற்பத்தியை ஊட்ச்சத்தான உணவினூடாக அதிகரிப்பது என்னும் கொள்கை முறைமைக்கு இணைவாக செயல்வடிவங்களை தீட்டிக் கொண்டுள்ளது. தற்போதுள்ள கொரோனா வைரஸ் தொற்றுதல் என்னும் சூழமைவுக்கு ஏற்ப அதனை எதிர்ப்பதற்கு உலகமே திரண்டெழும்பும் செய்திகள் அதனை முற்று முழுதாக இல்லா தொழிப்பதற்கு உதவிடும். உணவுற்பத்தியை பேண்தகு நிலையில் வைத்திருப்பதற்கும் அதனூடாக ஊட்டச்சத்தினளவானது தேவையானளவு கிடைக்கும் வகையில் தற்போதய திட்ட வரைபு கவனம் செலுத்தியிருக்கின்றது.

மேற்கூறிய விடயங்களில் விவசாயிகளுக்கு அவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் விவசாய செய்கைக்கான அணுகுமுறைகள் தெரிவு செய்யப்படல் வேண்டும். உள்ளீடு பெறுதல், அவற்றினை வேண்டியளவு பிரயோகித்தல் அதன் பின்னர் அறுவடை என பொதுவாக தரம் பிரித்தாலும் உணவுற்பத்தி நஞ்சற்ற ஊட்டச்சத்தான உணவினை உற்பத்தி செய்தல் என்னும் கோரிக்கையோடு பரந்துபட்டு மேலெழும்புவதனை காணலாம். அனைவரும் ஒன்றிணைந்து வறுமையையும் பட்டினியையும் ஒழிக்க பாடுபடல் காலத்தின் கட்டாயமாகும். அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான இச்செயற்றிட்டம் நிச்சயம் பரந்துபட்டளவில் மக்களுக்கு பயனுள்ளதாகவும் சிக்கித் தவிக்கும் இவ்விடரிலிருந்து தப்பிக்கவும் வழிகோலும். இயற்கையுடனிணைந்த வாழ்வினை நாம் வாழ எமக்கான உணவையும் ஊட்டச் சத்தையும் உற்பத்தி செய்வோம். சிறுகச் செய்தால் வீட்டுத்தோட்டம் பெருகச் செய்தால் எமது நஞ்சற்ற தேசத்தின் வளமான சந்ததியின் எழுச்சி.

பரவிவரும் வைரஸின் தாக் கம் பரந்துபட்டஅளவில் வெளிக் கொணர ஆரம்பித்துள்ளது. இது இன்னும் மக்களிடையே பயப் பீதியை உருவாக்குமளவுக்கு அதனது உருமாறி வீரியமும் அதிகரித்துச் செல்கின்றதென்றாலும் மக்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளால் ஓர ளவுக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வுச்செய்திகள் எடுத்துக் கூறுகின்றன. தடுப்பூசிகள் வழங்கப்படுவது நோயின் தாக்கத்தை ஓரளவிற்கு கட்டுப்படுத்தினாலும் வீரியம் பெற்று உருமாறும் கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்தும் அதன் பயப்பீதியிலிருந்தும் நாம் முழுமையாக விடுபட முடியாதிருக்கின்றது என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சுகாதாரத்துறையும் பாதுகாப்புத் துறையும் திரும்பத் திரும்ப எமது சுகாதாரத்தை வலியுறுத்திக் கூறினாலும் பல வகைகளில் அறிவுறுத்தினாலும் மக்கள் அதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாது அலட்சியப்படுத்தும்போக்கு காணப்படுவது கவலையளிப்பதாக இருக்கின்றது. வருமுன் காப்போம் என்பது தனிமனிதனிலிருந்து குடும்பத்திற்கும் மிகவும் அவசியம் என்பதனை கவனத்தில் கொள்க. எம்மை காத்துக் கொள்ளும் அதே நேரத்தில் நாமே காவியாகாமல் தவிர்ப்பதன் மூலம் மற்றையவர்களையும் காத்துக் கொள்ள முடியும்.

வைரஸின் தாக்கம் அதிகரிக்கின்றது என்றாலும் இயற்கையாக எமக்குள் நோயெதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த வேண்டிய கட்டாயத்தினுள் நாம் தள்ளப் பட்டிருக்கின்றோம் என்பதனையும் நாம் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும். உடலில் இயற்கையாக எதிர்ப்பு சக்தி வருவதற்கு நாம் உண்ணும் உணவு ஊட்டச்சத்து மிக்கதாக இருக்கவேண்டியது மிகவும் முக்கியமானது. பாரம்பரிய உணவுகளில் எமது கவனத்தை திருப்பினால் நிச்சயம் இதற்கு விடை கிடைத்து விடும். நோய்த் தொற்று ஏற்பட்டு முழுக் குடும்பமே அல்லல் படுவதனை விட சற்று உணவு விடயத்தில் அதீத கவனத்தை செலுத்துவது எமது சந்ததியை வலுவுள்ள பலமான நோயெதிர்ப்புடைய சந்ததியாக உருவாக்க முடியும். முயற்சி என்பது அனைவரின் குடும்பத்திலிருந்து வெளிவரவேண்டும். குடும்ப விவசாயம் இதனைத் தான் கட்டியங்கூறி நிற்கின்றது. குடும்ப விவசாயத்தில் புதுமைகளைக் கொண்டு வாருங்கள். எம்மவர்கள் குறிப்பாக விவசாயப் பெரு மக்கள் புதுமைகளை உருவாக்குவதிலும் அதனை செயற்படுத்துவதிலும் கைதேர்ந்தவர்கள். உலர் வலயமாக அறிவிக்கப்பட்ட கிழக்கு மற்றும் வடமாகாணத்தில் பச்சைப்பசேலென பயிர்களும் எந்நேரமும் நிலங்களும் காணப்படுவது எம்மவர்களின் அதீத பிரயத்தனத்திற்கு கிடைத்திருக்கும் சானறுகளாகும். நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்யும் வழிவகைகளைத் தேடியும் ஊட்டச்சத்தான உணவினை மலிவான முறையில் பயன்பாடு அதிகமற்ற தாவரங்களிலிருந்து அதிலும் மூலிகைத்தாவரங்களிலிருந்து உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்களையும் அவசியம் உள்வாங்க வேண்டிய நிலைக்குள் நாம் தள்ளப் பட்டிருக்கின்றோம். எமது தேசத்தில் ஒரு பகுதியில் உள்ள எளிய சூழலுக்கிணைவான தொழில்நுட்பத்தை மற்றைய விவசாயிகளுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துவது அனைவரையும் புதுமைகளை உள்ளீர்க்கும் செயற்றிட்டத்தினுள் இலகுவில் உள்வாங்கிக் கொள்ளலாம்.

ஏதனையும் சிறியளவில் செய்து பார்த்து அதன் விளைவுகளை ஏனையவர்களுக்கு எடுத்துச் சொல்வது சாலப் பொருந்தும். அந்த வகையில் வலம்புரியில் வெளிவரும் இக் கட்டுரைகளுடாக எமது விவசாயப் பெருமக்களின் சிறந்த உள்ளூர் தொழில்நுட்பங்களையும் அவர்களின் புத்தாக்கத்தையும் வெளிக்கொணர ஆவலாக உள்ளதனை உங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம். சிறியளவில் வீட்டுத்தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் புதுமையான விடயங்களையும் மற்றையவர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களையும் இவ்வாறான விடயங்களை அறிந்து தெரிந்த நேரில் சென்று பார்த்து தாமும் அதனை செய்து பார்க்க ஒரு தூண்டுதலாக இருக்கும் என்னும் நம்பிக்கையில் பலவற்றை அவ்வப்போது செய்தியாக தந்திருக்கின்றோம்.

அந்த வகையில் "ஒரு நெல் புரட்சி" என்னும் தலைப்பிட்டு யாழ்ப்பாணத்தில் றக்கா வீதியில் 43 ஆம் இலக்கத்தில் (பொஸ்கோ பாடசாலைக்கருகில்) உள்ள தமது சிறிய வீட்டுத் தோட்டத்தில் வி.சகாயதேவனின் முழு முயற்சியினால் பயிர் செய்யப்பட்டுள்ள பாசுமதி நெல் நன்றாக விளைந்து அறுவடை செய்யப்படுகின்றது. இதனைத் தெரியப்படுத்திய போது பலரும் அவரைத் தொடர்பு கொண்டு இதுபற்றி விசாரித்ததையும் நேரில் சென்று பார்த்ததையும் எம்மிடம் கூறி தமக்கு மேலும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்திருப்பதையும் இவ்வாறான விடயங்களை மேன்கொண்டு செய்வதற்கு இன்னும் உற்சாகமளிக்கின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். அவரின் இந்த முயற்சிக்கு அவரின் தந்தை, தாய், மனைவி, மக்கள் என குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உறுதுணையாக இருப்பதை நினைவு கூர்ந்தார்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 328




இவ்வாறாக செயற்பாடுகளை ஊக்குவித்து வலம்புரி எம் மக்களுக்கு செய்யும் சேவையாகவும் கருத முடிகின்றது. இது போன்ற விவசாயப் பெருமக்களின் வீட்டுத்தோட்ட செய்கையாளர்களின் புதுமைகளை எளிய தொழிநுட்பங்களை ஏனையவர்களுக்கு தெரியப்படுத்தவும் அவ்வாறானவர்களை மக்கள் மத்தியில் இனங்கண்டு அவர்களை கௌரவப்படுத்தவும் தொடர்ந்து வரும் இக்கட்டுரைக்களம் முயற் சிக்கும். அறியத் தாருங்கள். புதுமைகளை எளிய தொழில் நுட்பங்களை பயிர்ச் செய்கை விபரங்களை நோய் பீடை முகாமைத்துவத்தை மூலி கைத் தாவரங்களின் மர்மங் களை அனைவரும் தெரிந்து கொள்ள நாமும் தயாராக இருக்கின்றோம்.

பாரம்பரிய இனங்கள் பலவற்றை நாம் தொலைத்து விட்டோம். இருக்கின்றவற்றையாவது பாதுகாக்க முயற்சி செய்வது அவசியமாகின்றது. எமது தேசத்தில் இருக்கும் வளத்தை விடவா நாம் பிற இடங்களிலிருந்து பெறப்போகின்றோம். அதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கிஅதனுள் அனைத்து முயற்சியாளர்களையும் இணைத்துநமக்கான உணவை நமது பாரம்பரியத்திலிருந்து பெறும் காலத்தை நோக்கி நகர்வோம்.

சிறுகக் கட்டிபெருகவாழ் என்பது சிறியளவில் ஆரம்பித்து பின்னர் அதன் அனுபவத்தைக் கொண்டுபாரியளவில் செய்யும் கைங்கரியம் எனப் பொருள் கொண்டால் ஒரு நெல் புரட்சி எதிர்காலத்தில் இன்னொரு பசுமைப் புரட்சிக்கு வித்திடும். அதில் சேதன விவசாய செய்கை மட்டுமே பயிர் உற்பத்திக்கு அடித்தளமாக இருக்கும். நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்யும் நாடுகளில் நாமும் இணைந்து கொள்ள இப்படியொரு வாய்ப்பு எம்மவர்கள் நினைத்தால் மாற்றத்தை ஏற்படுத்தினால் நிச்சயம் சாத்தியப்படும். அதுவரை அனைவருக்கும் பயனுள்ள தகவல்களை இக்களத்தினூடாக தருவதில் மனநிறைவடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +1,785...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள பிந்திய அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 293, 083 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

உயிரிழப்புகள் 4,000ஐக் கடந்து அதிகரித்துள்ளன.

குறித்த மரணங்கள் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் 17 பேர் மற்றும் ஆண்கள் 26 பேரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 4,002 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழில் மேலும்...

78 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரை 118 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். (ம-3,33)

## வடக்கில் 50...

நேற்று பகல் 770 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 29 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர், வவுனியா மாவட்டத்தில் 03 பேர், மன்னார் மாவட்டத்தில் 11 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 05 பேர், இவர்களுடன் புதுக்குடியிருப்பு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-3)

## திருமணங்கள்...

கின்றோம் என பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றபோதும் அண்மைக்காலமாக இடம்பெற்ற பல திருமண நிகழ்வுகளின் சுகாதார வழிகாட்டல் சட்டம் மீறப்பட்டிருப்பது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடுமையான சுகாதார வழிகாட்டல் மற்றும் சட்டங்களுடனே திருமண நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதும் கடந்த சில வாரங்களுக்குள் இடம்பெற்ற திருமண நிகழ்வுகள் சுகாதார சட்டத்தை மீறி இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்திருக்கின்றது.

அதனால் இன்று முதல் நாடுபூராகவும் உள்ள திருமண விழா மண்டபங்களை கண்காணிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. (ம-3)

## போராட்டங்...

மேலும் வலுப்படுத்துவதற்கும் முடியும்.

எனவே இதுவிடயத்தில் அரசியல் அபிலாஷைகள் மற்றும் போராட்டங்களால் மாணவர்களின் எதிர்காலத்தைப் பலிகொடுப்பதற்கு இடமளிக்காமல் ஜனாதிபதியுடனும் கல்வியமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, இப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆசிரியர்களின் சம்பளம் நூற்றுக்கு நூறு சதவீதம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன்.

அதன்மூலம் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினரை முன்நிறுத்திய சேவையை உயர்மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கும் அதனூடாக இலங்கையின் இலவசக் கல்வி முறைமையை மேலும் வலுப்படுத்துவதற்கும் முடியும் என்றார். (ம-3)

## கொரோனாவால்...

நோயால் நேற்று மரணமடைந்துள்ளார்.

குறித்த நபர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றையதினம் மரணமடைந்துள்ளார். வவுனியா ஸ்ரீநகர் பகுதியை சேர்ந்த 38 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (ம-3,299)

## பௌத்த தேரர்...

இணைந்து பௌத்த தேரர்களும் வீதிக்கு இறங்கும் காலம் வெகுதொலைவில் இல்லையென முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார்.

விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் போராட்டங்களை முன்னெடுத்துள்ள நிலையில், ரோம் நகரம் பற்றி எரிந்த போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்த கதையாக இலங்கை அரசின் கதையும் மாறியுள்ளது.

ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். அரசாங்கத்தை உருவாக்கியது பௌத்த தேரர்களே. நாங்கள் கூறுவதை இவர்கள் கேட்காவிடின், பொதுமக்களின் கருத்துக்களுக்கு இவர்கள் செவிசாய்க்கவில்லையெனின், நாங்களும் பொதுமக்களுடன் இணைந்து வீதியில் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை அரசாங்கத்திற்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளால், இந்த அரசாங்கத்தை நாம் உருவாக்கினோம்.

எனினும் இவர்களும் சரியாக செயற்படுவதாக தெரிய வில்லை. இந்த அரசாங்கத்திற்கு சரியான வழிகாட்டல்களை வழங்க ஆலோசகர்கள் இல்லை. இதுவே் பிரச்சினை என்றும் தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது

கோட்டே, கொலன்னாவ, அங்கொட, நவகமுவ, மாபாகே, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, இரத்மலானை, பேருவளை, காலி, மாத்தறை, தம்புள்ளை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் டெல்டா கோவிட் திரிபுடன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் "டெல்டா" தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இந்தி...

அஜேந்திர பஹதுர் சிங் ஹெலிகொப்டர் மூலம் கண்காணித்துள்ளார். (ம-3)

## ஜேர்மனியில்...

ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

பெரும் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்ட வடக்கு ரைன் - வெஸ்ட்பாலியா மாகாணத்தின் euskirchen என்ற இடத்தில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளது தந்தையான இராசரத்தினம் இலக்குமணன் (வயது-36) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இவர் யாழ்ப்பாணம் மீசாலையை பூர்விகமாகக் கொண்டவர். கடந்த 15ஆம் திகதி அவர் வெள்ளத்தில் சிக்குண்டார் என்பது தெரியவந்துள்ளது. (ம-3)

## கறுப்பு ஜூலையை...

இலங்கையில் தமிழர்களை வதைத்த கறுப்பு ஜூலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாயகம் மட்டுமல்லாது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களிலும் நேற்றைய தினம் நினைவுகூரப்பட்டது.

அந்த வகையில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் லண்டனில் கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ம-3)

## அஞ்சிய காலம்...

மேலும் நாட்டில் பல களவுகள் இடம்பெற்று கொண்டுதான் இருக்கின்றன. வெளிநாட்டில் உள்ள கறுப்பு பணத்தை நாட்டிற்குள் கொண்டு வருவது சட்டமாக்கப்படுகின்றது.

புதிய நிதியமைச்சர் இதனை மேற்கொள்கின்றார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். (ம-3)


தன நிதானய
திகதி - 2021.07.23
சீட்டிழுப்பு இலக்கம் - 544
R 11 35 41 82
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2809
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 15 56 58 66

மஹஜன சம்பத
திகதி 2021/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 4514
Q 7 0 4 3 8 1

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 1602
சுபர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 14 36 49 57

மெகா பவர்
திகதி 23/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0862
வெற்றி எழுத்து O / சுபர் இலக்கம் 19
வெற்றி இலக்கங்கள் 20 43 68 78

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1317
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 23.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,030,908
வெற்றி இலக்கங்கள் 12 23 31 60 I
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3652
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 23.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,369,952
வெற்றி இலக்கங்கள் 12 24 42 69 T
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 2,665,474/=
திகதி: 23.07.2021
வெற்றி வாரம்: 3203
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 34 36 43
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 5,974,380/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1491
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 23/07/2021
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் D 17 18 22 76
அடுத்த சுப்பர் ஜக்பொட 59,963,664/=

V 46 56 58 73
734
23.07.2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,101,385
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

ஜே.சி கலப்பின பால் இனப் பசுக் கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (7431)

**077 663 1742**

**வேலை ஆள் தேவை**

கிளிநொச்சியில் இரண்டு German shepherd நாய்களை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு ஒருவரை தேடுகின்றோம். (7427)

Viber or Whatsapp

**0041789629985**

**வேலை வாய்ப்பு**

கனடாவில் தலைமையகத்தைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. (7413)

**076 209 8164**

**ஸ்ரீ மீனாட்சி லொத்தர் விற்பனை நிலையம்**

மீண்டும் ஒரு லட்சாதிபதி!

இடம் - கரைச்சி பலநோக்கு கூட்டுறவு சங்கம் (Co-op City) அருகாமை. ஆனந்தபுரம். (C-2404)

விற்பனையாளர்

V. சங்கர்

**AGX**

**ஏற்றுமதியாளர்கள்**

ஆகாய,கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

கனடா 650/=

லண்டன் 975/= (C-2386)

இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**076 443 1578**

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் A9 வீதிக்கு அண்மையில் 16 பரப்பு தென்னங் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (7286)

**077 187 7018**

**வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரசித்திபெற்ற நிறுவனம் ஒன்றில் அடிப்படைச் சம்பளத்துடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

- ☐ Coordinator
- ☐ Customer care
- ☐ Assistant
- ☐ Sales advisor

அடிப்படைச் சம்பளம் 15,000/= - 30,000/= வரை.
29.07.2021 இல் இருந்து நேர்முகத் தேர்வு நடைபெறும். (7426)

தகவல்களுக்கு அ.யூட்ஸ்சன் பதிவுகளுக்கு முந்துங்கள்

இல: 86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**076 527 2633|070 620 2726**

**கனடா-STUDENT VISA**

A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2385)

IELTS இலவசமாக கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**0777-068-777**

**அன்னா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-2384)

070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை

பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை

மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2383)

**0768226240** DHL

**மணமகள் தேவை**

1983 யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சூரியன், செவ்வாய் பாவக்கிரகம் குறைந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு (7257)

**+49 17672490328**
**+94 772598289**


# திருமலை எண்ணெய் குதங்களை இந்தியாவிடமிருந்து மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலையில் உள்ள இந்தியா வசம் இருக்கும் இலங்கையின் எண்ணெய்க் குதங்களில் 24 குதங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் தொடர்ச்சியாகப் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம் என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டில் தற்போது மக்களின் பயன்பாட்டுக்குத் தேவையான எரிபொருள் தாராளமாக உள்ளது என்றும், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் உறுதியளித்தார்.

இலங்கையில் உள்ள எரிபொருள் களஞ்சிய நிலையங்களில் முழுமையாக எரிபொருளை நிரப்பினாலும், ஒரு மாதத்துக்கான எரிபொருளையே சேமிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கைக்குப் புதிதாக எண்ணெய்க் குதங்கள் அவசியமாகின்றன என்றும், திருகோணமலை குதங்களில் 24 குதங்களைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம்என்றும்அவர் குறிப்பிட்டார்.

(ம-03)

# மரண அறிவித்தல்



## திருமதி
## யோகசவுந்தரி இளையதம்பி

( இளைப்பாறிய ஆசிரியை – ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலடி, தண்ணீரூற்று, முல்லைத்தீவு )

தண்ணீரூற்று முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், கொழும்பு, தண்ணீரூற்றை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகசவுந்தரி இளையதம்பி நேற்று (23.07.2021) வெள்ளிக்கிழமை தண்ணீரூற்று முல்லைத்தீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தண்ணீரூற்று கணவதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சிவன் கோவிலடி, ஆவரங்கால், புத்தூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற இளையதம்பியின் (இளைப்பாறிய CTB Depot manager - முல்லைத்தீவு) அன்பு மனைவியும் Dr. அனுசுயா (கொழும்பு), அஜந்தீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr. சுதர்சன் (கொழும்பு), அர்ச்சனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அட்சயா, ஆருண்ஜா (கொழும்பு), ஆரோஜிகா, ஆகாஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஜெகசவுந்தரி (ஆசிரியை), ஜெகதீஸ்வரன் (பரன்), காலஞ்சென்ற சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தம்பிநாதன், கந்தசாமி (Retired Deputy Auditor General - Colombo), சிவசுந்தரம் (இளைப்பாறிய வரி அலுவலர் - லண்டன்), சோதிநாதன் (இளைப்பாறிய ஆசிரியர் - தண்ணீரூற்று), காலஞ்சென்ற தர்மராஜா (தண்ணீரூற்று), தவமணிதேவி (தண்ணீரூற்று) ஆகியோரின் மைத்துனியும் நாகேஸ்வரி (கொழும்பு), அருளேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகலியும் கனகசிவம் (UK), கனகேஸ்வரி (ஆவரங்கால்), யோகசிவம் (UK), இராசசிவம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (23.07.2021) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தண்ணீரூற்றில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7433)

ஜெகதீஸ்வரன் (பரன் - சகோதரன்) - 0094 777 07 2081
கந்தசாமி (மைத்துனர் - கொழும்பு) - 0094 715 34 9150
DR. அனுசுயா (மகள் - கொழும்பு) - 0094 773 41 7640
அஜந்தீபன் (மகன் - கனடா) - 001 416 731 3458
சிவசுந்தரம் (மைத்துனர் - லண்டன்) - 0044 7725567007

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.